www.tamilarangam.net

ISSN- 1174 -2879



# வெண்ணிலவு

ஆவணி – 1997

நியூசிலாந்தில் இருந்து வரும் புதிய தமிழ் இதழ்






தமிழ் மணி









திரு. முருகேசு



திரு. டானியல்

"எக் காரணத்தை
முன்னிட்டு வந்தாலும்
நாங்கள் அகதிகள் மாதிரித்தான்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*With Best Compliments From*



# GREENLANDS

## ORIENTAL RESTAURANT

இடியப்பம், பிட்டு, தோசை, இட்லி, கொத்துறொட்டி, வடை,
இனிப்புவகைகள்.... இன்னும் பல சுவையான உணவுவகைகளைச்,
சுவைத்து மகிழ..... நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்,

**GREENLANDS**

*124/ Main Highway*

*Ellerslie.*

உங்கள் பிறந்த நாள் கொண்டாட்டங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், திருமண விழாக்கள், மற்றும் சகல விருந்துபசாரங்களிலும், மலிவான... தரமான..... உணவுவகைகளுக்கும், சேவைக்கும்.... நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

**Greenlands**

**124/ Main Highway**

**Ellerslie.**



**Free Home Delivery, Takeaway, Park & Pick-Up are available. For Reservation, Call**

**Telephone:5255987/88**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனோசக்தி

இடைவிடாத தன்னம்பிக்கை சிந்தனைகளின் எல்லையற்ற சக்தியைப் பயன்படுத்துகிறது. உள்மனத்தைத் திட்டமிட்டு சில குறிப்பிட்ட வழிகளில் கையாண்டால் உங்களுடைய வாழ்க்கையும், ஏன், அதை உருவாக்கும் சூழ்நிலையும் கூட அதிசயிக்கத்தக்க முறையில் மாற்றமடையும் என்பதில் சந்தேகமில்லை.

மனோசக்தி எப்படி வேலை செய்கிறது, எந்த வகையில் பிரமிக்கத்தக்க விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதெல்லாம் இன்னும் மர்மமாகவே உள்ளன.

மின்சாரத்தின் நுட்பங்கள் நமக்குப் புரியவில்லை என்பதற்காக அதன் அனுகூலங்களை அடைய நாம் எப்படி மறுப்பதில்லையோ அதுபோல மனோசக்தி எவ்வாறு வேலை செய்கிறது என்பது மர்மமாக இருந்தாலும், வெற்றிச் சாதனமாக அதைப் பயன்படுத்த நாம் தயங்கக்கூடாது.

மனோசக்தியைப் பயன்படுத்தும் உத்தி என்பது என்ன? ஒரு குறிப்பிட்ட பொருளை அடைய வேண்டும் என்ற விருப்பம் உங்களுக்கு இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். மனம் அதைப்பற்றி ஒரு முகப்பட்டு நினைக்க நினைக்க விருப்பம் தீவிரமடைந்து வெப்பமுற்று உள்மனத்தின் ஆழத்தில் தன் வடிவத்தைப் பதிக்கிறது. அங்கிருந்தபடி உங்கள் எண்ணங்களையும் செயல்களையும் தொடர்ந்து உருவாக்குகிறது. உங்களது சூழ்நிலையையும் வாய்ப்புக்களையும் கூடத் தகுந்தபடி உருவாக்கித் தரக்கூடும். முடிவில் அதன் தீவிரத்தின் விளைவாக விருப்பம் நிறைவேறுகிறது, எண்ணம் நிஜமாகிறது.

சில மனோதத்துவ நிபுணர்கள் உங்களது உள்மனத்திற்கும் பிரபஞ்சம் முழுவதையும் நடத்திச் செல்லும் மகா சக்திக்கும் தொடர்பு இருக்கிறது என்றும், எங்கும் நிறைந்துள்ள அந்தப் பிரபஞ்ச சக்தியின் ஓர் அம்சமே உள்மனம் என்றும் கருதுகிறார்கள்.

சமயச் சார்புள்ளவர்கள் 'விருப்பத்தைத் தீவிரப்படுத்தி, உள்மனத்தின் மூலம் எங்கும் நிறைந்துள்ள போது மனதுக்கு அல்லது கடவுளுக்குத் தெரிவிக்கும் உத்தியைப் பிரார்த்தனை' என்று சொல்கிறார்கள்.

வார்த்தை எதுவானாலும், மனோசக்தியின் மூலம் அடையப்பெறும் பிரமிக்கத்தக்க பலன்கள் அதிசயமானவை என்றுதான் சொல்ல வேண்டும். மனோசக்தி என்பது நிச்சயமாக வெற்றித் திறவுகோல்களில் முக்கியமானது என்று சொல்லலாம்.

நன்றி : Dr.M.R.காப்மேயர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெண்ணிலவு

ஆவணி 1997
நிலவு 1 - பிறை 1

வணக்கம்,

நலம் தானே.

நீங்கள் தந்த ஊக்கத்தால் 'வெண்ணிலவு' வெளிவருகிறது.

வெண்ணிலவு தமிழர் தம் நிலையான கலைப்பொருள்களுள் ஒன்று. அறிவு பூர்வமாய் அன்றி உணர்வு பூர்வமாய் தமிழர்களால் ரசிக்கப்படுவது.

பாரி மகளிர் வெண்ணிலவைக் கண்டு தாம் தந்தையோடிருந்து மகிழ்ந்த காலத்தை நினைவு கூர்வதாய் சங்கப் பாடல் பேசும்.

இன்று உலகம் முழுவதும் புலம்பெயர்ந்திருக்கும் தமிழர்க்கு, வெண்ணிலவு தம் தாய் நாட்டை நினைவூட்டும் சின்னம்.

காணும் போதெல்லாம் "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்" – என எண்ணங்கள் விரிவது தவிர்க்க முடியாததாகிறது.

அக்காரணம் கொண்டே இப்பெயர்.

வெளிக்கொணர்ந்தது நம் முயற்சி.

நிலைக்கச் செய்வது தங்கள் கைகளில்.

உள்ளத்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வோம் வெண்ணிலவில்.

நன்றி

-ஆசிரியர்-


## வெண்ணிலவு

நியூசிலாந்தில் இருந்து வெளிவரும் தமிழ் இதழ்

ISSN- 1174-2879

ஆசிரியர் : யாழ்ப்பாணம் தி.திருநந்தகுமார்.

முகவரி : 158 Pigeon Mountain Road, Bucklands Beach Auckland, New Zealand.

தொலைபேசி : + 64 9 535 9797

ப(f)க்ஸ் : + 64 9 535 9701

மின்னஞ்சல் (Email) : kamban@xtra.co.nz.

அட்டைப்படக் காட்சிகள் : ராஜேந்திரன் (மாத்தளை)

அச்சுப்பதிவில் உதவி : க.குமாரதாசன்

அச்சுப்பதிவு : யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் இல, 48B புளூமெண்டால் றோட், கொழும்பு –13, இலங்கை.

தொலைபேசி : 330194

வெளியீடு : தமிழ்ப் பதிப்பகம், த.பெ.இல: 82160, ஹைலண்ட் பார்க், ஆக்லாந்து, நியூசிலாந்து.

Editor : Yarl Thirunanthan

Published by : Tamil Publication, P.O. Box 82160, Highland Park, Auckland, New Zealand

Printers : Unie Arts (Pvt) Ltd Colombo, Sri Lanka


## வெண்ணிலவு

நியூசிலாந்துத் தமிழர்களின் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும்,

எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கவும் சம கால தமிழ் இலக்கியப் படைப்புகளை எழுத்தில் கொண்டுவரவும் உதிக்கிறது.

பாரெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் இலக்கியப் பாலமாகத் திகழ்ந்து புலம் பெயர்ந்த தமிழர்தம் படைப்புக்களையும் தாய் நாட்டின் படைப்புக்களையும் அவ்வப்போது அறிமுகம் செய்யும் புதிய இதழ்.

இலக்கியப் படைப்பாளிகளே! உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். தேவை கருதிப் பிரசுரிப்போம்

இளம் எழுத்தாளர்களே! எழுத்துத்துறை ஆர்வலர்களே! எழுதுங்கள்! தொடர்ந்து எழுதுங்கள்! தகுதியானவை பொருத்தமான வேளையில் பிரசுரமாகும்

வாசகர்களே! இந்த சஞ்சிகையின் தொடர்ச்சியான வளர்ச்சியை உறுதி செய்வதற்கு சந்தா செலுத்தி உதவுங்கள்.

### சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப் பிரதி | : NS $ 2.00 |
| தபால் செலவுடன் | : NS $ 2.80 |
| வருடச் சந்தா (பத்து இதழ்கள்): | |
| நியூசிலாந்தில் | : NZ $ 25 |
| அவுஸ்திரேலியாவில் | : AU $ 25 |
| ஏனைய நாடுகளில் | : US $ 25 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முதல் வணக்கம்



**யாழ் தேவன்** யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கலை பயில் கழகம்; தமிழர் தலை நிமிர் கழகம் என்று போற்றுதலோடு நிமிர்ந்து நின்ற கல்லூரி. அங்கு 73 –76 காலப்பகுதி – நானும் தலை நிமிர்ந்து நின்ற காலம். முதலில் அணுக்கத் தொண்டனாக்கியவர் அமரர் தேவன் – யாழ்ப்பாணம் என்ற நடமாடும் தகவற் களஞ்சியம். எங்கு சென்றாலும் அழைத்துச் செல்வார். அவர் மோட்டார் சைக்கிளில் அவர் பின்னே அமர்ந்து அவர் செல்லுமிடமெல்லாம் பிரயாணம். இடையிடையே சந்தேகங்கள் கேட்டால் உடனேயே பதில். அது இலக்கியம் என்றில்லை. எந்தத் துறையாயினும் சரிதான். "அவர் தொடாத துறையோ, தொட்டுத் துலங்காத துறையோ இல்லை" என்று பாராட்டப்பட்டவர். அறிவிப்பாளர், மொழிபெயர்ப்பாளர், நாடகாசிரியர், எழுத்தாளர், பட்டிமண்டப நடுவர், வழக்காடு மன்றங்களில் நீதிபதி, தொழிற்சங்கவாதி இப்படி எத்தனையோ பக்கங்களைக் கொண்ட தேவன் என் அன்புக்குரிய மானசீக ஆசிரியர். அவர் வகுப்பில் நான் கற்கவில்லை. அவரோடு பிரயாணம் செய்கையிலேயே அவரிடம் அதிகம் தெரிந்துகொண்டேன். இளம் வயதிலே மோட்டார் சைக்கிள் ஓட்டும் ஆசை; ஒலிவாங்கியில் அறிவிப்புகள் செய்ய ஆசை..... இப்படி பலப்பல ஆசைகள் பதினேழு வயதில் என்னிடம் நிறையவே இருந்தன. "மனதில் தெம்பு இருந்தால் மோட்டார் சைக்கிளை யாரும் ஓட்டலாம்" ஒரு நாள் எங்கோ செல்லும் போது ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னார். எனக்கு அப்போது ஆசை மட்டுமே இருந்தது என்று அறிந்து கொண்டேன்.

"தெளிவான உச்சரிப்பு, என்ன பேசப்போகிறோம் என்பதில் தெளிவு; இந்த இரண்டும் இருந்தால் துணிந்து மைக்கைக் கையில் தூக்கலாம்" இது அவர் அடிக்கடி அறிவிப்பாளர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது கூறுபவை. பாடசாலையிலும் சரி, வெளி மேடைகளிலும் சரி அவர் வார்த்தைகளே எனக்குத் தொடர்ந்து வழிகாட்டின.

இந்த மாமனிதர் வெறும் ஆசானாக அன்றி ஒரு தந்தையாகவே பாசம் பொழிந்தவர். 'இந்த மனிதருக்கு எதுதான் தெரியாது' என்று பழகியவர்களைப் பிரமிக்க வைக்கும் பேச்சு அவருடையது. ஆசிரியப் பணியில் நாற்பது ரூபா மாதச் சம்பளம் வாங்குகையில் பத்து ரூபாவிற்குப் புத்தகங்கள் வாங்குவாராம். அடுத்த மாதம் புத்தகங்கள் வாங்குவதற்கிடையில் முன்பு வாங்கியதைப் படித்து முடித்துவிடுவேன் என்பார். அவருடைய வீட்டில் உள்ள நூலகம் அரிய பொக்கிசம். அவரே ஒரு நூலகம் தான். ஏன், அவரும் ஒரு நல்ல நூல்; நல்ல நண்பன் நல்ல நூலைப் போல என்பான் வள்ளுவன். தேவன் ஒரு நல்ல நண்பனும் தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முதல் வணக்கம்

**க.சிவராமலிங்கம்**

அந்த நல்ல உறவு பெற்றுத் தந்தது இன்னோர் நல்ல உறவை. 'குழந்தைகளே' என்று அவர் பாடசாலையில் பிரார்த்தனை மண்டபத்தில் எம்மை விளிக்கும்போது ஆகா இப்படி ஒருவரை ஆசிரியராகப் பெற முடியவில்லையே என்று ஏங்கிய நாட்களும் அவர் உறவிற்காகக் காத்திருந்த நாட்களும் ஏராளம். அவர் தான் இன்றும் என் நண்பர்கட்கும் எனக்கும் தந்தை போன்று அரவணைத்துக் காத்து ஆதரித்து வரும் பேராசான் சிவராமலிங்கம் அவர்கள்.

அப்போது யாழ். இந்துவில் தமிழ்த் துறைக்குத் தலைவர். சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் தே. பொ. மீ.யின் மாணவராக இருந்தமை அவர் பேச்சின் மிடுக்கில் தெரியும்.

அவரைச் சந்தித்ததே ஒரு மறக்க முடியாத சம்பவம் தான்.

கல்லூரியில் காலைப் பிரார்த்தனையின் போது திருமுறை ஓதல் இடம்பெறும். வெள்ளிக்கிழமைகளிலும் ஏனைய விரத நாட்களிலும் விசேட பூசையுடன் ஆசிரியர்களின் உரைகளும் இடம் பெறுவதுண்டு. மாணவர் தொகை கருதி மூன்று பிரிவுகளாக பிரார்த்தனையில் கலந்து கொள்வர். 1975ல் ஒருநாள் எனக்கு திடீர் என்று பிரார்த்தனை மண்டபத்தில் உரையாற்றினால் என்ன என்றோர் விபரீத எண்ணம் ஏற்பட்டுவிட்டது. இத்தனைக்கும் நான் ஒரு பேச்சாளனே அல்ல. அவ்வப்போது மாணவர் மன்றக் கூட்டங்களில் குரல் கொடுப்பது வழக்கம். சில காலமாகவே மனதில் உறுத்திக் கொண்டிருந்த எண்ணத்தினால் ஒரு வியாழக்கிழமை துணிந்து நேரே அதிபர் சபாலிங்கம் அவர்களிடம் சென்று என் ஆசையைச் சொன்னேன். அவரிடம் கேட்கும் துணிவு எப்படி வந்தது என்பது எனக்குத் தெரியாது. அவரோ, மிக ஆறுதலாக நான் சொல்வதைக் கேட்டார். "நீயே வந்து நேரில் கேட்பதையிட்டு எனக்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கிறது. எனினும் நான் முடிவு சொல்லக் கூடாது. திரு. சிவராமலிங்கம் அவர்கள் தான் பொறுப்பாசிரியர். அவரிடம் சென்று பேசு" என்றார் முதுகில் தட்டியபடி.

எனக்கு அந்தரத்தில் பறப்பது போன்ற உணர்வு. உடனே ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களிடம் சென்றேன். அப்போது அவரிடம் நெருங்கிப் பழகியதில்லை. அவருக்கோ தயக்கம். "பேச்சுப் போட்டிகளில் முதற்பரிசு பெறுபவர்களைத் தான் பிரார்த்தனையில் பேச விடுவது வழக்கம். நீயோ பேச ஆசைப்படுகிறாய். அதிபரிடம் கேட்டுப் பார்க்கிறேன்" என்றார். "அதிபரிடம் ஏற்கனவே இது பற்றிப் பேசியுள்ளேன். உங்கள் சிபார்சுதான் தேவை" என்றேன். "அப்படியென்றால் எனக்கும் மகிழ்ச்சி தான். ஒரு புதிய ஆரம்பம் என்று இருக்கட்டுமே" என்றார். மீண்டும் அதிபரைத் தேடினேன். தலையசைத்து ஏற்றுக் கொண்டார். "எவ்வளவு நேரம் பேசுவாய்" என்றார். "அது தான் தெரியவில்லை" என்றேன். "குறைந்தது பத்து நிமிடம் பேச வேண்டும். முடியுமா?" என்றார். "அதற்கு மேலும் பேசுவேன் என்றேன்". "சிவராமலிங்கம் அவர்களுடன் பேசி முடிவு செய்" என்றார். மீண்டும் ஆசிரியர் முன் தோன்றி "எவ்வளவு நேரம் பேசவேண்டும்" என்று கேட்க, அவரோ "ஐந்து நிமிடம் போதும்" என்றார். "அதிபர் பதினைந்து நிமிடம் என்கிறாரே" என்று ஒரு குண்டு போட்டேன். அதிர்ந்து போனார் ஆசிரியர். "சரி அப்படியே பேசு. பிடிக்காவிடில் மாணவர் கூக்குரல் இடுவார்கள். சபையை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். என்ன செய்வாய்?" என்றார். "சரி, பத்து நிமிடம் பேசுகிறேன்" என்று அனுமதி வாங்கிக் கொண்டேன்.

அடுத்த நாள் வெள்ளிக்கிழமை. சற்று முந்தியே கல்லூரி சென்று விட்டேன். "இன்றைய பேச்சாளராமே" எனக் கேட்டபடி வாழ்த்தினார் ஆசிரியர் கப்டன் சோமசுந்தரம். மனது நெகிழ்ந்துவிட்டது.

காலைப் பிரார்த்தனையின் போது அதிபர் சபாலிங்கம் அவர்கள் குருக்களிடம் காளாஞ்சி வாங்கியபின் ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களிடம் 'சரி உங்கள் பணியைத் தொடருங்கள்' என்பது போல் தலையசைத்த நேரம் நான் அவர் பின்னே நிற்கிறேன். சற்று ஏமாற்றமாக இருந்தது. 'அதிபருக்கு அடுத்த பிரார்த்தனைக் கூட்டங்களையும் பார்க்கின்ற அவசரம் போலும்' என நினைத்துக் கொண்டேன். "இன்று ஒரு மாணவன் பேசுவதாக ஏற்பாடு நீங்கள் தானே ......." என்று சிவராமலிங்கம் அவர்கள் முடிக்குமுன் "நல்ல வேளை நினைட்டினீர்கள்" என்றபடி ஒலிவாங்கி முன் சென்றார் அதிபர். ஏதோ முக்கிய அறிவித்தல் போலும்; அதிபரே நேரில் வந்துள்ளாரே என்பது போல் மாணவர்கள் உற்சாகமாக நிமிர்ந்திருக்கின்றனர்.

"வழக்கமாக ஆசிரியர்கள் தான் இங்கு உரையாற்றுவார்கள். இன்று ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முதல் வணக்கம்

மாணவன் உரையாற்றப் போகிறார். நீங்கள் எல்லோரும் அமைதியாக இருந்து கேட்க வேண்டும்" என்று ஆரம்பித்த அதிபர் சபாலிங்கம், "சுவாமி விவேகாநந்தர், மகாத்மா காந்தி முதற் கொண்டு பற்பல மகான்களும் அறிஞர்களும் இந்த மண்டபத்தில் தோன்றி அருளுரை வழங்கியுள்ளனர். அத்துணை சிறப்பும் புனிதமும் வாய்ந்த இம்மண்டபத்தில் பேசுவது உண்மையிலேயே ஒரு பெரிய பாக்கியம் தான்" என்று கூறியபடியே என்னைப் பார்த்து அழைத்தார்.

நெஞ்சில் ஒரு படபடப்பு. எனினும் என் குருநாதன் திருவடிகளை மனதில் வாழ்த்தி வணங்கியபடி ஒலி வாங்கி முன் செல்கிறேன். பலத்த கரவொலி எழுப்பி வரவேற்கின்றனர் மாணவர்கள். "இந்த லௌகீக உலகில்.." என்று மெதுவாக ஆரம்பிக்கிறேன். ஆத்மீகம் தான் பேசுவதாக நினைத்திருந்தேன். என்ன பேசினேன்; எப்படிப் பேசினேன் என்பதெல்லாம் நினைவில் இல்லை. பேசி முடிந்ததும் மறுபடியும் கரவொலி. முகமெல்லாம் வியர்த்துக் கொட்டுகிறது. முகத்தைத் துடைக்கிறேன்; தொடர்ந்து துடைப்பது போல் பாவனை செய்து கொண்டு நிற்கிறேன். கரவொலி மெல்ல அடங்குகிறது. நிமிர்ந்து பார்க்கிறேன். அதிபர் சபாலிங்கம் மீண்டும் ஒலிவாங்கி முன் நிற்கிறார். அவர் சென்றிருப்பார் என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு அவரைப் பார்க்க படபடப்பு மேலும் அதிகமாகியது. அவர் என்ன பேசினார் என்று எனக்குக் கேட்கவே இல்லை. "இன்று ஒரு தீபத்தை ஏற்றிவைத்திருக்கிறோம். அது தொடர்ந்து ஒளிவிட்டுப் பிரகாசிக்க வேண்டும் என ஆண்டவனை வேண்டுகிறேன்" என்ற அவரின் குரல் மட்டும் என் நினைவில் இன்றும் ஒலிக்கிறது.

அவர் எதனைத் தீபம் என்றார் என்பதில் எனக்குத் தெளிவில்லை. கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் மாணவர்களும் பேசும் முயற்சியினையே கருதியிருப்பார் என்று நினைத்துக்கொண்டேன். ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்கள் என்னை அருகில் அழைத்து வாழ்த்தியதும் "தொடர்ந்து பேசு; முடிந்த போதெல்லாம் பேசு" என பின்னர் என்னைத் தனியே அழைத்து ஊக்கப்படுத்தியதோடு "அடிக்கடி என்னை வந்து பார்" என்று பாசம் பொங்கக் கூறியதும் இன்னமும் நெஞ்சில் பசுமையாக உண்டு. தொடர்ந்து மூன்று வெள்ளிக்கிழமைகள் பிரார்த்தனை மண்டபத்தில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றியது என் மனதிற்கு நிறைவாக இருந்தது. எனினும் ஆசிரியரிடம் தொடர்ந்து செல்லும் நெருக்கம் எனக்கு வரவேயில்லை.

ஒரு நாள் ஆசிரியர் தேவன் வீட்டில் நான் இருந்த வேளை அவர் வந்து சேருகிறார். நான் புறப்பட இருந்த சமயம் தேவன் தடுக்கிறார். "கொஞ்சநேரம் இருந்து விட்டுப் போம் ஐசே" மறுக்க முடியாமல் அமர்கிறேன். பலதும் பத்தும் பேசுகிறார்கள். மௌனமாகக் கேட்டு ரசிக்கிறேன். ஏதோ ஒரு கட்டத்தில் கல்லூரியில் வருடாந்தம் வெளியிடப்படும் 'இந்து இளைஞன்' சஞ்சிகை பற்றிப் பேச்சு வந்தது. "சஞ்சிகையின் தமிழ்ப் பகுதிக்கு எப்படி ஆசிரியரைத் தேர்வு செய்கிறீர்கள்" நீண்ட நாட்களாக மனதில் இருந்த கேள்வி தயக்கத்துடன் வெளிப்படுகிறது.

"ஏன் உனக்கு அந்தப் பதவியில் ஆர்வமா?"

"இல்லை. சும்மாதான் கேட்கிறேன்."

"இது ஓரிரு நாட்களில் செய்கிற முடிவல்ல. வருடம் முழுவதும் பாடசாலை நிகழ்ச்சிகளில், தமிழ்ப் பேச்சு, கட்டுரை போன்ற துறைகளிலும், பாடசாலை சார்பில் பாடசாலைக்கு வெளியே நடைபெறும் போட்டிகளிலும் பங்குபற்றுபவர்களை ஆராய்ந்து ஒருவரைத் தெரிவு செய்வோம்."

"அப்படியென்றால் எனக்குச் சரி வராது"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்" இது தேவன்.

"பாடசாலையிலோ பாடசாலை சார்பிலோ கட்டுரை எழுதியதில்லை".

"வேறு என்ன எழுதியிருக்கிறாய்?"

"ஆசிரியருக்குக் கடிதம்"

"யார், சுந்தரதாஸா?" (கடேற் படையில் அவர் எனது உள்ளம் கவர்ந்த ஆசிரியர்)

"எதைப் பற்றி?"

"தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என்பதைப் பற்றி"

"பிரசுரமானதா?"

"ஒரு பந்தியை விட"

"சரி. சமயம் வரும்போது அதனைச் சிந்திப்போம்" சிவராமலிங்கம் ஆசிரியர் இப்படிக் கூறியதோடு அந்த விடயம் முடிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முதல் வணக்கம்

1975ல் யாழ். இந்துக் கல்லூரியில் அதிபர் சபாலிங்கம் இளைப்பாற, 'பி. எஸ்.'என நண்பர்களால் அழைக்கப்படும் பொ. ச. குமாரசாமி அதிபராகப் பொறுப்பேற்கிறார். அவர், தேவன், சிவராமலிங்கம் இருவரினதும் பள்ளித் தோழன். பி. எஸ். காலத்தில் ஆசிரியர் சிவராமலிங்கம் விடுதி அதிபராகப் பொறுப்பேற்கிறார். ஏற்கனவே வீட்டை மறந்து விடுதியிலேயே பெரும் பொழுதைக் கழித்த எனக்கு முன்னரைப் போன்று விடுதியில் தங்கப் பயம். புதிய நிர்வாகம், புதிய பொறுப்பாளர்.

இந்தக் காலத்தில் ஒருநாள், ஆசிரியர் சிவராமலிங்கத்திடம் இருந்து அழைப்பு. ''இந்து இளைஞன் சஞ்சிகைக்குத் தமிழ்ப் பகுதி ஆசிரியராக உன்னை நியமிக்க அதிபர் ஒப்புதல் தந்துள்ளார்.'' நேரில் சென்ற போது அவர் கூறினார். பிரமிப்பு, மகிழ்ச்சி இன்னும் இனம் புரியாத பல உணர்வுகள்; அந்தக் கணத்தை மறக்க முடியாது.

குரு தேவன் பெற்றுத் தந்த உறவு பாலமாகியது. புதிய உறவு தெம்பாக இருந்தது. மீண்டும் விடுதியோடு ஒட்டிக் கொண்டேன். ஆசிரியருடன் சேர்ந்து அவர் செல்லும் விழாக்களுக்குச் செல்வதும் நள்ளிரவில் பள்ளி திரும்புவதுமாக பொழுது கழிந்தது. அவர் வாயிலிருந்து பிறக்கும் வார்த்தைகளுக்காகத் தவமிருப்பேன். தமிழ், இலக்கியம், சமயம் மட்டுமன்றி ஆங்கில இலக்கியம், தத்துவம் என்ற துறைகளிலும் நல்ல கருத்துகள் தருவார்.

இந்து இளைஞன் ஆசிரியர் என்ற முறையில் சஞ்சிகைக்கென வந்த மாணவர்களின் தமிழ் ஆக்கங்கள் அனைத்தையும் தனித்தனியாக வாசித்துத் தேர்வு செய்வது முதற்பணி. ஏற்கனவே ஒரு தமிழாசிரியர் அவற்றைப் பார்த்து மதிப்பீடு செய்து குறிப்புகள் எழுதியிருந்தார். அதற்கு மேல் நான் என்ன செய்யப் போகிறேன் என்ற தயக்கம் என் மனதில். என் பேராசானையே அணுகினேன். ''உன் இரசனையில் என்ன தோன்றுகிறதோ அதனை அப்படியே குறித்துக் கொள். மிகுதியை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று தெம்பூட்டினார். எனக்குள் ஒரு நிமிர்வு வந்தது. இதழ் ஆசிரியப் பணியில் அதிக சிரமம் ஏற்படவில்லை.

இந்த உறவில் மலர்ந்திருந்த வேளையிலே இரு பெரும் 'மனிதர்களை'ச் சந்தித்தேன். ஒருவர் வித்துவான் க. ந. வேலன். மற்றவர் வித்துவான் சி. ஆறுமுகம்.

## வித்துவான் க.ந. வேலன்

வித்துவான் வேலன் அவர்கள் நாவலர் பாடசாலையில் அதிபராக இருந்தபோது இந்துக்கல்லூரி விடுதியில் மதிய உணவுக்காக வருவார். ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களின் நண்பன். அவர்கள் இருவரின் உரையாடலைக் கேட்பதே நல்ல தமிழ் விருந்து தான்.

வேலனார் அரசியல் பிரவேசம் செய்ததுண்டு. தேர்தலிலும் போட்டியிட்டவர். இந்தியாவில் சில காலம் தங்கியிருக்கையில் யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகள் பற்றி ஆய்வு செய்து அதற்காக அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றினால் கலாநிதிப்பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டவர். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் கல்வியும் அதனைத் தொடர்ந்து பீ. ஓ. எல். பட்டமும் பெற்றவர்.

வித்துவான் வேலன் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு அருகில் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், வடமராட்சியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி என்பவற்றிலும் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். புகழ்பெற்ற யாழ்ப்பாணக் கல்விமான்கள் பூரணம்பிள்ளை, முத்துவேற்பிள்ளை, பேராயிரவர் போன்றோரின் கீழ்ப் பணியாற்றி அவர்களின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் ஆளாகியவர்.

அவரின் மாணவனாக இருந்த என் மைத்துனர் அடிக்கடி அவர் பற்றிச் சொல்லும் செய்தி ஒன்று உண்டு. ஐம்பதுகளின் கடைசியில் அவர் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராக இருந்தவேளை ஒரு நாள் தமிழ் இலக்கிய வகுப்பு. வேலனார் வந்ததும் ஒரு மாணவனை அழைத்து ''நூலகத்தில் கடைசியாக வந்த ஆனந்த விகடனை எடுத்து வா'' என்று பணிக்கிறார். அடுத்த நிமிடம் வேலனார் கையில் அவ்வார விகடன். மளமளவெனப் பக்கங்களைப் பிரித்து ஜெயகாந்தனின் ''யாருக்காக அழுதான்'' கதையைக் காட்டி, ஒரு மாணவனை வாசிக்கும்படி கூறுகிறார். வாசித்து முடிந்ததும் ''இதுவும் இலக்கியம் தான்'' என்கிறார். தான் படித்துச் சுவைத்ததை தன் மாணவரும் அறியவேண்டும் என்பது மட்டுமன்று நோக்கம். எப்படியெல்லாம் தமிழில் எழுதுகிறார்கள்; எப்படியெல்லாம் தமிழ் செய்கிறான் நவீன இலக்கிய வாதி என்று மாணவர்கட்கு அவ்வப்போது காட்டுவது வேலன் அவர்களின் தனிப்பாணி. 'விகடன் போன்ற சஞ்சிகைகளா? அவை தீண்டத் தகாதன' என்று தமிழ்ப் பண்டிதரில் ஒரு பகுதியினர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முதல் வணக்கம்

சஞ்சிகைகளை ஒதுக்கி வைத்த வேளையில் துணிச்சலுடன் விகடன் ஆக்கம் ஒன்றை வகுப்பில் படித்துக் காட்ட வேலன் ஒருவரால் தான் முடியும்.

நியாயத்திற்காக துணிந்து குரல் கொடுப்பவர் வேலன். அஞ்சா நெஞ்சினர். அவர் தோற்றத்தில் உள்ள கம்பீரம் அவர் பேச்சிலும் எழுத்திலும் உண்டு. மனித நேயமும் இரக்க சிந்தையும் உடையவர். முற்போக்கான சிந்தனையாளர். முன்னைய கால தமிழாசிரியர்களில் பலர் அதிகாரத்திற்குப் பயந்த சுபாவமுடையவர்களாக இருக்கின்றார்களே என்று கொதித்தெழுந்தவர். "முதலில் வாழ்க்கையில் பொருள் தேடு" என்று குறள் கூறுவார். "பட்டிமண்டபம் பேச வேண்டும், புத்தகங்கள் ஏதாவது கிடைக்குமா" என்று கேட்டால் 'என்ன புத்தகம் படித்தாய் ?' எனக் கேட்பார். பார்த்த புத்தகத்தைக் கூறினால் "அது போதும்; படித்தது போதும்; படித்ததைச் சிந்தி; தொடர்ந்து சிந்தி; புதிய விளக்கம் தோன்றும்; புதிய பொருள் தோன்றும்" என்பார். "சும்மா சும்மா நுனிப்புல் மேயாதே. ஒரு புத்தகம் படித்தால் அது பற்றி நன்றாகச் சிந்தித்துப் பார். இவரை மீட்டுக் கொள்; அதன் பின் தேவையாயின் மறு புத்தகம் படி" என்பார். புத்தகம் கிடைக்கவே கிடைக்காது. அவர் அறிவுரை தான் இன்றும் எமக்கு 'இருட்டு வழியில் கை விளக்கு' போல. எத்தகைய மேடையாயினும் அங்கு எத்தகைய பொருளாயினும் ஆசான் வேலன் கற்பித்த பாடமே வழித் துணை!

**வித்துவான்.சி. ஆறுமுகம்** யாழ் இந்துக் கல்லூரி விடுதியில் உணவு வேளையில் மாணவர்கட்கு தனியாக வாங்கு மேசைகள் உண்டு. ஒவ்வொன்றிலும் பத்துப் பேர் வரை வசதியாக அமர்ந்திருக்கும் அளவு நீளமானவை. மாணவர் தலைவர்களும் ஆசிரியர்களும் தனித் தனியே அமர்ந்திருப்பர். ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களின் கைத் துணையாக நான் செல்வதால் எனக்கும் ஆசிரியர்கள் மத்தியிலேயே இடம் கிடைக்கும். எனக்கு அருகில் தினமும் தேடி அமர்ந்து கொள்ளும் ஒருவர் தான் வித்துவான் ஆறுமுகம். அவரின் அன்புள்ளம் உடனே தெரிந்து கொண்டேன். அவரின் உள்ளே இருந்த அறிவுச் சுரங்கத்தை அறியும் பக்குவம் எனக்கிருக்கவில்லை. அவருக்குச் சொந்த இடம் புங்குடுதீவு. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டத்திற்குப் படித்தவர். அங்கிருந்த இலங்கை மாணவர்கட்கு அண்ணனாக தன்னைக் காட்டி உதவியவர். வித்துவான் வேலனும் அவரும் ஒருவரில் ஒருவர் ஈடிணையற்ற அன்பு கொண்டவர்கள்.

யாழ். இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகி வருமுன்னர் நீண்டகாலம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியப் பணி புரிந்தவர் வித்துவான் ஆறுமுகம். அங்கு பணிபுரியும் காலை, ஏராளமான தீவுப்பகுதி மாணவர்களை ஊக்கப்படுத்தி தன் கல்லூரியில் சேர்ப்பித்து விடுதியில் அவர்கட்கு தோன்றாத் துணையாக இருந்து கல்விப் பணி புரிந்தவர். நெற்றியில் 'பளீரெ'ன்று துலங்கும் வெண்ணீறு; வெள்ளை வேட்டி, நஷனல் கோலத்தில் வாயில் எந்நேரமும் திருமுறைப் பண் முணுமுணுக்க கல்லூரியில் வலம் வருவார்.

உணவு வேளையில் அவர் கூறிச் சென்ற செய்திகள் தான் எத்தனை? எத்தனை? இலக்கிய, சமயச் செய்திகள், அண்ணாமலை விடுதியில் நடந்த நிகழ்ச்சிகள் என்று பலவகைப்பட்ட செய்திச் சரங்கள் அவை.

மாலை வேளையில் ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களின் அறை வாயிலில் தமிழறிஞர் கூடுவர். பலதும் பத்துமே ஆகினும் தமிழ் இலக்கியச் செல்வத்திற்கும் குறைவில்லை. அவ்வப்போது சுவையான தமிழ்க் கவிதை உடன் தருவார் வித்துவான் ஆறுமுகம். தொடர்பான இலக்கியச் சான்றுகளும் உடனேயே வந்துவிடும். அந்தத் தமிழ் விருந்து நடக்கையில் கோடியில் நான் இருக்கும் பாக்கியம் தந்தவர் யார்? அவர் தலைவர் என்று நான் சிவராமலிங்கம் ஆசியரை வணங்கிக் கொள்வேன்.

1976 இல் யாழ் இந்துவில் புதிதாக ஒரு 'கனத்த' பேச்சாளர் அடையாளம் காணப்பட்டார். கவர்ச்சியான பேச்சு; கணீரென்ற குரல்; இயல்பான நகைச்சுவை; நுண்பொருள் காணும் அறிவு. இத்தனைக்கும் சொந்தக்காரர் அந்தப் பருத்த இளைஞன்; அவர் தான் இலங்கை ஜெயராஜ் என தமிழக அறிஞர்களிடையே தற்போது பிரபலமாகியுள்ள கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள். தமிழ்க் காதல் அவர் குழாத்தில் என்னையும் இணைத்தது. எமது சொற்போருக்கு கம்பன் காவியம் களமாயிற்று. கம்பன் சுவை மாந்திக் களிப்புற்றோம்.

எமது ஆசிரியர்களில் தேவன் அவர்களும், சிவராமலிங்கம் அவர்களும், 'இலங்கைக் கம்பன் கழகம்' என்ற அமைப்பில் முன்னாள் நீதியரசர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முதல் வணக்கம்

தம்பையா, பேராசிரியர் நந்தி, வித்துவான் சொக்கலிங்கம் போன்றோருடன் அறுபதுகளில் இணைந்து பணியாற்றியவர்கள். ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்கள் எமக்கு தாம் நடாத்திய கம்பன் விழாக்கள், நடைபெற்ற சுவையான விவாதங்கள், சொற்பொழிவுகள் பற்றி அடிக்கடி குறிப்பிடுவார். எமது இலக்கியக் காதலும், கம்பன் பணியில் தமிழகத்தில் உள்ள கம்பன் கழகங்கள் ஆற்றிவரும் பணிபற்றிய சுவைமிகுந்த செய்திகளும் நாம் பாடசாலையை விட்டு வெளியேறிய பின் 'அகில இலங்கைக் கம்பன் கழகம்' என்னும் இலக்கிய அமைப்பை நிறுவத் துணைபோயின.

1980 வைகாசியில் நண்பர் ஜெயராஜின் ஏற்பாட்டில் நாம் ஒன்று கூடி, கழகம் என்னும் விதை நாட்டினோம். அதுவே இன்று பெருவிருட்சமாக வளர்ந்துள்ளது. எல்லாம் எம் ஆசிரியத் தெய்வங்களின் அருளாசியால் தான். நான் முன்னர் குறிப்பிட்ட நால்வரும் கழகத் தூண்களாக எம்மைத் தாங்கினர். தேவன் அவர்களும், ஆறுமுகம் அவர்களும் அமரராகிவிட்டனர். இன்னமும் தோன்றாத் துணையாக இருக்கின்றனர்.

ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களும், வித்துவான் வேலன் அவர்களும் இன்னமும் தம் பிள்ளைகள் போன்று எம்மைப் பேணுகின்றனர். இந்த நால்வர் பெருமக்களும் என் இலக்கியப் பயணத்தின் ஆரம்பத்திலும் முக்கிய கட்டங்களிலும் துணைநின்ற, நிற்கின்ற தெய்வங்கள். பிறந்து, ஓடி விளையாடித் திரிந்த மண்ணில் வாழ முடியாது இடம் பெயர்ந்த சூழலில், குடும்ப அழுத்தங்களை தொடர்ந்தும் எதிர்கொள்ள முடியாமல் நியூசிலாந்து மண்ணிற்கு வந்த வேளை, கனவும், நினைவும் பிறந்த மண்ணுக்காக ஏங்கியிருக்கும் வேளை பேச முடியாத தமிழை எழுதித்தான் பார்ப்போமே என்ற உந்தலும், ஒரு தரமான பல்சுவை இதழை இங்கு உருவாக்க வேண்டும் என்ற அவாவும் ஒன்றுசேர்ந்து தினமும் என்னை வாட்டியதின் விளைவே இந்த 'வெண்ணிலவு'

எவ்வித நிதி ஆதாரமும் இன்றி, வெறும் அவாவும் நண்பர்கள் துணையும் மூலதனமாகக் கொண்டு இந்த முயற்சியில் இறங்குகிறேன். என்னை இது நாள்வரை வழிகாட்டி வாழ்வித்த தெய்வங்கள் கை கொடுக்கும் என்று நம்பியே இம்முயற்சி தலைமேற் கொண்டேன்.

இவ்வேளையில், என் தெய்வங்களை வாழ்த்தி வணங்குகிறேன்.

ஆசிரியர்:
தி. திருநந்தகுமார்
*(தலைவர், அகில இலங்கைக் கம்பன் கழகம்)*

# வெண்ணிலவே! நீ வாழி!!

அழும் குழந்தை தனை அடக்க
அன்னை காட்டும் வெண்மதியைத்
தழுவுகின்ற காதலர்க்குத்
தூதாகும் தண்மதியை
பழுதில்லா முழுமதியைத் தன்
பெயரா!ப்த் தாங்கிக் கொண்டு
விழுப்பொருளைச் சொல்லவரும்
வெண்ணிலவே! நீ வாழி!!

விளைய இருக்கின்ற நிலந்தன்னை
உழும் ஏராய்
இளைய தலைமுறைக்கு
இனிய தமிழ்ப் பொருளாய்
பழைய கதையெல்லாம்
படிப்பிக்கும் பண்பாட்டாய்
வளைய வருகின்ற
வெண்ணிலவே! நீ வாழி!!

நல்லதைத் தாங்கி வரும்
நடு நிலைமைப் பொருளாய்
அல்லல் தீர்த்து
அருந்தமிழைக் காப்பதுவாய்
எல்லாரும் எல்லாமும்
படித்திட உதவுவதாய்
வெல்லம் போல் இனிப்பதுவாய்
வெண்ணிலவே! வாழி!! வாழி!!!

*த. நந்திவர்மன்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரமுகர் அறிமுகம்



## திரு. பேரம்பலம் முருகேசு

*இலங்கையில் கைத்தொழில் அமைச்சில் ஏற்றுமதிப் பிரிவின் இயக்குனராக (Director) இருந்தவர். பின்னர், ஐக்கிய நாடுகள் அமைப்பின் (UNO) சர்வதேச வர்த்தக நிலையத்தின் சிரேஷ்ட திட்ட இணைப்பாளராகக் கடமையாற்றியவர் (Senior Project Coordinator - ITC ). நியூசிலாந்தில் சத்யசாயி இயக்கத்தின் தேசிய இணைப்பாளராக இருக்கும் இவரை இவருடைய றெமூறா (Remura) இல்லத்தில் 'வெண்ணிலவு' சஞ்சிகைக்காகப் பேட்டி கண்டோம்.*

கேள்வி:- நீங்கள் இலங்கையில் கைத்தொழில் அமைச்சில் இயக்குனராக பதவி வகித்த காலத்தில் நடந்த மறக்க முடியாத நிகழ்ச்சிகளில் ஒன்றைச் சொல்ல முடியுமா?

பதில் :- அந்தப் பதவியைப் பொறுத்தவரை, அப் பதவிக்கு நான் வந்ததே எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி தான். நான் எப்போதுமே ஒரு அதிதிறமைசாலியாக இருக்கவில்லை. இப்பதவிக்காக திட்டமிட்டு முயற்சிக்கவுமில்லை. இதை நான் எனது வாழ்க்கையில் நடந்த, ஏனைய சம்பவங்களைப் போல ஒரு தெய்வாதீன நிகழ்ச்சியாகவே கருதுகிறேன்.

நான் கைத்தொழில் அமைச்சில் கூட்டுத்தாபனங்களுக்கு (Corporation) பொறுப்பான அதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். திரு. பிலிப் குணவர்த்தனா (கைத்தொழில் அமைச்சர்) 'சேர்ந்து வேலை செய்வதற்கு மிகக் கஷ்டமானவர்' என அதிகாரிகளிடையே அவரைப் பற்றி ஒரு அபிப்பிராயம். அவர் ஒருநாள் என்னை அழைத்து, ''சில காலம் உம்மை வெளியே அனுப்பப் போகிறேன்'' என்று சொன்னார். பிடிக்காதவர்களையும் அப்படி அனுப்புவது வழக்கமாதலால் எனக்குக் குழப்பம். பின் அவராகவே ''நீர் ஒரு விடுமுறையில் சென்று கூட்டுத்தாபனங்களைத் திறம்படச் செயற்படுத்தத் தேவையான விடயங்களை அறிந்து வரவேண்டும். அதற்கான ஒரு திட்டத்தை நீரே தயாரித்து என்னைச் சந்தியும்'' என்று சொன்னார்.

நான் இதுபற்றி அப்போதைய நிரந்தரக் காரியதரிசி (Permanent Secretary) யுடன் கதைத்து என்ன செய்யலாம் என யோசித்தேன். வழமையாக இத்தகைய சந்தர்ப்பங்களில் அதிகாரிகள் ஐரோப்பிய நாடுகளுக்குப் போய்வருவது வழக்கம். எங்கள் கூட்டுத்தாபனங்களைப் பொறுத்தவரை 'ஐரோப்பிய நாடுகளை விட வேறு நாடுகளில் உள்ள சந்தை வாய்ப்புகளை (Marketing Opportunities) அறிந்தால் என்ன?' என நான் யோசித்தேன். அதன் பிரகாரம் மத்திய கிழக்கு நாடுகளையும், ஆபிரிக்க நாடுகளையும் தேர்ந்து ஒரு பட்டியலிட்டேன். பின் அந்நாடுகளில் சந்தைவாய்ப்புத் தேடுவதற்காக மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் (Ceramic Corporation) உற்பத்திப் பொருட்கள், வேறு கூட்டுத்தாபனங்களின் உற்பத்திப் பொருட்கள் தனியார் துறையின் ஏற்றுமதித் தகுதி உள்ள பொருட்கள் ஆகியவற்றைப் பட்டியலிட்டேன். விபரமாகத் திட்டங்களைத் தயாரித்து நிரந்தரக் காரியதரிசியைச் சந்தித்தபோது அவர் மகிழ்வுடன் அதை ஏற்றார். அடுத்து அமைச்சரைச் சந்தித்தோம். அவர் ஆச்சரியப்பட்டு, ''இது மிகப் பெரிய கடமை, இதைத் தனியாளாகச் செய்ய முடியாது. இன்னும் நால்வரை உதவியாக அனுப்புகிறேன். ஒரு குழு அமைத்து அதற்கு நீங்களே தலைவராகச் சென்று வாருங்கள்'' என்று சொன்னார். உடனடியாக பிரதமர் அலுவலகத்திற்கும் அவ்விபரங்களை அறிவித்தார். அப்போது பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்காவும் அக்குழுவின் வருகை பற்றி நாங்கள் செல்லவிருக்கும் நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு அறிவித்ததோடு தேவையான ஒத்தாசைகளைத் தரவும் ஆணையிட்டார் .

தனியாளின் விடுமுறையாகி ஆரம்பித்தது, சக்திவாய்ந்த ஒரு குழுவாகப் பரிணமித்தது. அப்பயணத்தில் ஈராக்கில் நாங்கள் நடத்திய ஆரம்பப் பேச்சுவார்த்தைகளின் போதே ஒருவர் 14 லட்சம் பீங்கான் பொருட்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாங்க ஒப்புக் கொண்டதும், நான் உடனடியாக மட்பாண்டக் கூட்டுத்தாபனத் தலைவரைத் தொடர்பு கொண்டு அப் பொருட்களை உற்பத்தி பண்ண ஒழுங்கு செய்ததும் குறிப்பிடத்தக்கதாகும். லெபனான் நாட்டில், எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனத்தின் பொருட்களுக்குக் கிடைத்த வரவேற்பும் இப் பயணத்தின் மற்றொரு வெற்றியாகும். எதியோப்பியாவில் உடுதுணிப் பொருட்கள் விற்பனையாயினவாயினும் முற்றிலும் எதிர்பாராத ஒரு சம்பவமும் நடந்தது. அவர்களுக்கு விஞ்ஞான, ஆங்கில, வர்த்தக ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்தது. அதுபற்றி நான் தகவல்கள் பெற்று இலங்கைக்கு வந்ததும் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டேன். அரசாங்கம் மூலம் ஏதும் செய்யமுடியவில்லை. ஆனால், இதுபற்றி அறிந்த பத்திரிகைக்காரர்கள் என்னுடன் தொடர்புகொண்டார்கள். அவர்களே முன்னின்று முயற்சித்ததால் 400 ஆசிரியர்கள் வரை இப் பயணத்தின் பயனாக நன்மை பெற்றார்கள்.

இப் பயணத்தில் நடந்த ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சி. நாங்கள் எகிப்து நாட்டுக்குப் போவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர், பிரதமர் டட்லி சேனநாயக்கா அங்கு சென்றிருந்தார். அரசியல் ரீதியில் இலங்கையின் முழு ஆதரவையும் எகிப்து நாட்டுக்குத் தருவதாக அவர் ஆற்றிய உரை அந்த அரசாங்கத்திற்கு எமது நாட்டின் மீது ஒரு மதிப்பை ஏற்படுத்தியிருந்தது. இந் நிலையில் நாங்கள் ஈராக்கில் இருந்து எகிப்து போவது பற்றி அறிவித்த போது அவர்கள் விசேட வரவேற்பு ஒன்றை ஒழுங்கு செய்திருந்தார்கள். ஈராக் தூதரகத்திற்கு அச் செய்தியை அறிவித்தபோது "இக்குழுவின் தலைவன் அரச விருந்தினராக (State Guest)த் தங்க வேண்டும். இதை அவருக்குத் தெரிவிக்கவும்'' எனத் தகவல் தந்திருந்தார்கள். அரச விருந்தினரைக் கௌரவிக்கும் அவர்கள் மரபின்படி, எனக்கு 'ஓமர் கயாம்' (Ommar Kayam) மாளிகையில் தங்க இடமும் எந்நேரமும் இரு காவலர்களும் (Guards) அளித்திருந்தார்கள்.

இந்தப்பயணத்தை முடித்து வந்தபோதுதான் ஏற்றுமதிக்கு ஒரு பிரிவை அமைத்து என்னை இயக்குனராக்கினார்கள்.

**கேள்வி :-** நீங்கள் பங்குபற்றிய முக்கியமான பணிகள் ஏதாவது குறிப்பிட முடியுமா?

**பதில் :-** அவ்விதம் குறிப்பிடுவதானால் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஆரம்ப கால அமைப்பில் என் பணியையும், சுதந்திர வர்த்தக வலய அமைப்பில் ஆரம்ப கால முயற்சிகளில் என் பங்களிப்பையும் குறிப்பிடலாம்.

உலகத்தின் முதலாவது சுதந்திரவர்த்தக வலயம் சனன் (Shanon) என்ற இடத்தில் நிறுவப்பட்டது. அதை நேரிற் சென்று ஆராய்ந்து அதே மாதிரி ஒரு வர்த்தக நிலையத்தை அமைக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது. நான் அதன் காரியதரிசியாகக் கடமையாற்றினேன். இது நடந்தபொழுது அரசாங்கம் மாறி திரு.டி.பி. சுபசிங்க (T.B. Subasinghe) கைத்தொழில் அமைச்சராக இருந்தார். நாங்கள் ஒரு விரிவான அறிக்கை தயார் செய்து அமைச்சருக்குச் சமர்ப்பித்தோம். அதை அமைச்சரவையில் ஆராய்ந்த போது நாங்களும் கூட இருந்தோம். ஒரு அமைச்சர் எனது தோளில் கைவைத்து "தோழரே (சகோதரய) வெள்ளைக்காரர்களை மிகச் சிரமப்பட்டு பண்டாரநாயக்கா வெளியேற்றினார். நீங்கள் அவர்களை பின்வாசல் வழியாகக் கொண்டுவர வழி செய்கிறீர்கள்" என்று சொன்னார். அந்த அரசாங்கம் அமுல் செய்யத் தவறிய திட்டம் பின்னர் அமுலாக்கப்பட்டது.

**கேள்வி :-** நீங்கள் ஐக்கிய நாடுகள் தாபனத்தில் வேலை செய்த போது நடந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்?

**பதில் :-** இங்கும் அதேபோல் தான். இந்தப் பதவியையும் அவர்களாகவே அழைத்துத் தந்தார்கள். நான் அமைச்சில் இயக்குனராக இருந்த போது ஏற்பட்ட அறிமுகத்தில் அவர்களுக்கு என்னைப்பற்றித் தெரிந்திருந்தது.

பங்களாதேசத்தில் நான் கடமையாற்றியபோது ஏற்றுமதித் தொழிலுக்கு ஐக்கிய நாடுகள் நிறுவனம் மூலம் பல உதவிகளைச் செய்தோம். ஏற்றுமதியாளர்களை அழைத்துச் சென்று, இறக்குமதி செய்யும் நாடுகளில் உள்ள நிலைமைகளை விளக்கி, அவர்களது பொருட்களை அனுப்பும் விதத்தைச் சீர்செய்யக் கற்றுத் தந்தோம்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ் வேலை செய்த காலத்தில் அவர்களுடைய ஊதியத்தையும் இதர வசதிகளையும் விட ஒரு நாட்டின் தொழில் அபிவிருத்திக்கு உதவியாகவும் வழிகாட்டியாகவும் இருந்த திருப்தியே எனக்கு முக்கியமாகப்படுகிறது. இத் தொழில்களால் பயன் பெற்ற ஏழைத் தொழிலாளர்களின் முன்னேற்றமும் மகிழ்ச்சியுமே மறக்க முடியாதவை.

**கேள்வி:-** நீங்கள் பல நாடுகள் சென்று வந்தவர். நியூசிலாந்தைத் தேர்ந்து எடுத்ததற்கு காரணம் என்ன?

**பதில் :-** பிள்ளைகளைத் தொடர்ந்து இங்கு வந்தேன். இந்த ஊரின் அமைதியும் அழகும் எனக்குப் பிடித்துவிட்டன. அதனால் இங்கேயே வாழ்வதெனத் தீர்மானித்துவிட்டேன்.

நான் பலகாலம் சத்தியசாயி இயக்கத்தில் இருந்தாலும் இங்குதான் எனக்குச் (இலங்கையில் கிடைக்காத) சேவை செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்நாட்டைச் சேர்ந்த ஆத்மீகத்தில் ஆர்வமுள்ள பலரைச் சந்திக்கவும் பிறர்க்கு சேவையாற்றவும் இங்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

**கேள்வி :-** நீங்கள் வந்த காலத்தோடு ஒப்பிடும்போது இன்று ஒக்லாந்து நகரில் என்ன வித்தியாசத்தைக் காணுகிறீர்கள்?

**பதில்:-** நகரம் தற்போது மிக அதிகமாக வர்த்தக மயப்பட்டிருக்கிறது. அதனோடு சேர்ந்து குற்றங்கள் அதிகரித்திருக்கிறதாகச் செய்திகள் வருகின்றன. (சிரிக்கிறார்)

**கேள்வி :-** புலம் பெயர்ந்து இந்நாட்டிற்கு வந்திருக்கும் எமது சமுதாயத்திற்கு உங்கள் செய்தி?

**பதில் :-** புலம் பெயர்ந்து வரும் எவரும் கஷ்டங்களை எதிர் நோக்கவேண்டிவரும். நாம் எதிர்பார்ப்பதை விட மிக அதிகமாக அக்கஷ்டங்கள் வரக்கூடும். அவற்றிற்கு முகம் கொடுத்து வாழ்க்கையை அமைக்கவேண்டும்.

எக் காரணத்தை முன்னிட்டு சொந்த நாட்டைவிட்டு வந்தாலும், நாங்கள் அகதிகள் மாதிரித்தான். எங்களுடைய திறமைகளை இந் நாட்டுப் பின்னணியில் அபிவிருத்தி செய்து எமக்கும், எமது சமுதாயத்திற்கும், எம் நாட்டுக்கும் பயன் கிடைக்கத் தக்க வகையில் நாம் வாழ வேண்டும். அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்தால் பல சாதனைகள் செய்யலாம்.

**பேட்டி கண்டவர் : தாசன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிட்டாவும் கரப்பான் பூச்சியும்...

அனுராதா ரமணன்



*அனுராதா ரமணன்*
*இவர் தமிழகத்தின் பிரபல பெண் எழுத்தாளர்களில் ஒருவர்.*
*சற்று வித்தியாசமானவர்.*
*பெண் எழுத்தாளர் என்றாலே*
*பெண்ணியம் பேச வேண்டும்*
*என்னும் வரைவுக்குள் அகப்படாதவர்.*
*இக்கதையில் மனைவியின் ஆளுமைக்குட்பட்ட*
*ஓர் ஆணின் சங்கடத்தை அழகுற விபரிக்கிறார்.*
*23.02.97 'ஆனந்த விகடனில்' இக் கதை பிரசுரிக்கப்பட்டது.*
*நல்லதோர் சிறு கதைக்கு இக் கதை ஓர் உதாரணம்.*
*'வெண்ணிலவு' வாசகர்களுக்காக மறு பிரசுரம் செய்கிறோம்.*
*'விகடனுக்கு' நன்றி.*

'ஒரு கரப்பான் பூச்சியுடன் சிநேகம் கொள்ள முடியுமா.....?' கிட்டாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்படியொரு இளகின மனசு, தனக்குள் இருப்பதே அது நாள் வரையில் தெரியாமல் இருந்தது அதைவிட வியப்பாக இருந்தது.

கரப்பான் பூச்சியைப் பார்த்தாலே எட்டு ஊருக்குக் கேட்கும்படியாக உமட்டலெடுப்பாள், அவன் மனைவி சுலோச்சனா.

"இந்தாங்க.... இங்கே வாங்களேன். முதல்ல இந்தச் சனியனை அடிச்சுத் தொலையுங்களேன்....."

இப்படிக் கூச்சலிடுவாள். கிட்டா, துடைப்பத்தை எடுத்துக் கொண்டு ஓடி வருவான். 'தொப் தொப்'பென ஒரு போர் வீரனைப் போல அத்துனூண்டு ஜீவனுடன் சண்டையிடுவான்.

அத்தனை அடிகளையும் வாங்கிக் கொண்டு செத்தாற் போல் – மட்ட மல்லாக்கக் கால்களைப் பரப்பிக் கொண்டு கிடக்கும் அது... துடைப்பக்கட்டையினால் லாகவமாய்த் தூக்கும் போது 'விர்ர்ர்'ரென ராக்கெட் மாதிரி முகத்தில் இடித்துக் கொண்டு பறக்கும்.

"உக்கும்... ஒரு கரப்பான் பூச்சியை அடிக்கத் துப்பில்லே.....!" இப்படிப் பல சமயங்களில் சுலோச்சனாவின் வார்த்தைகளினால் ரோஷப்பட்டு, இன்னும் அதிக ஆத்திரத்துடன் கரப்பானைக் கண்ணில் கண்டாலே துவம்சம் செய்திருக்கிறான்.

அப்படிப்பட்டவன் – இன்று குளியலறையில் ஒரு கரப்பான் பூச்சியைப் பார்த்ததும் அடிக்காமல், தனக்குள் புன்சிரிப்புடன் சொல்லிக்கொண்டான்.

"வந்துட்டியா ....... வா...."

கரப்பானோ, தனக்கே உரிய சாமர்த்தியத்துடன், இவனைக் கண்டதும் ஜலதாரையின் இடுக்கில் போய்ப் பதுங்கியது. அவன் குளித்து முடிக்கும் வரையில் வெளியில் வரவே இல்லை.

'ஒரு வேளை நாம் அடிப்போம் என்று இதற்கு முன்பே தெரியுமோ.....?'

கிட்டா, கடைசி சொம்பு தண்ணீரைத் தலையில் கொட்டிக் கொண்டே ஜலதாரையை உற்றுப் பார்த்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாதாரணமாக, முழுசாய் வளர்ந்த கரப்பான் பூச்சிகள் தான் ஜலதாரை வழியாக வரும்... சிறிய பூச்சிகள் அலமாரியிலும் மேஜையிலும் குறுக்கும் நெடுக்குமாக ஓடும்.

இது பெரிசாகவும் இல்லாமல் சிறிசாகவும் இல்லாமல் ரெண்டுங்கெட்டானாக இருந்தது.

அடிப்பதற்குத் தோதாகப் பக்கத்தில் துடைப்பம் இல்லை. மேலும், கிட்டாவைப் போலவே அதுவும் இன்று ஒற்றையாக இருந்தது.

'அப்பா, அம்மா, கூடப் பொறந்தவங்க யாருமில்லையோ....? எப்படி இருக்க முடியும்... அதான் கண்டதும் கொல்லச் சொல்லி தலைவி உத்தரவு போட்டிருக்காளே...'

அப்போதுதான் – கிட்டாவுக்கு ஞாபகம் வந்தது.

சுலோச்சனா ஊரில் இல்லை. திரும்பிவர ஐந்து நாட்கள் ஆகும். அது மட்டுமில்லை... அவனது அருமந்த புத்திரிகள் கூட அம்மாவோடு கிளம்பிப் போயிருக்கிறார்கள்.

கிட்டுவுக்குக் கல்யாணமாகி இருபத்தைந்து வருட இல்வாழ்க்கைக்குப் பிறகுதான், இந்த ஐந்து நாள் சுதந்திரம் கிடைத்திருக்கிறது.

'இப்படி ஒரு சந்தோஷத்தை நாம் அனுபவிக்கும் போது – இந்த அல்பஜீவனுக்கும் ஏன் கொஞ்சம் கருணை காட்டக் கூடாது' என்று நினைத்தான் அவன்...

'பிழைத்துப் போ......'

தலையைத் துவட்டியபடி வெளியே வந்தான். பாத்ரூம் கதவைத் தாழிடும் முன் ஜலதாரை இடுக்கைப் பார்த்தான்.

இப்போது அதுவும் சற்று தைரியம் வரப்பெற்று கொஞ்சம் வெளியே வந்திருந்தது.

கிட்டாவுக்குச் சிரிப்பு வந்தது.

அவன் கூட இப்படித்தான். சுலோச்சனா வீட்டில் இல்லாதபோது தான் தைரியமாக – அவனது இஷ்டப்படி வீட்டில் வளைய வர முடியும்.

ஆனால், அது போன்ற சந்தர்ப்பங்கள் சின்ன வயது முதலே அவனுக்குக் கிடைத்ததில்லை.

சிறு வயதில் அம்மா. அப்புறம் மனைவி. இத்தனைக்கும் கிட்டாவின் மனைவி ஒன்றும் புருஷனை எண்ணெய்ச் சட்டியில் போட்டு வதைக்கிற ரகமில்லை. அம்மாவைக் காட்டிலும் தேவலாம்.

இல்லையில்லை.... அம்மா ஒரு விதம். இவள் இன்னொரு விதம்.

எது எப்படியிருந்தாலும், ஓர் ஆணுக்குத் தனிமை அவ்வப்போது அவசியமாகிறது.

நண்பர்களைக் கூட்டிவந்து வைத்துக்கொண்டு அரட்டையடிக்க... சத்தமாகப் பாட்டுப் பாட..... சுயம்பாகமாய் எதையாவது செய்து – ஒரு கையில் புத்தகத்துடன் நிதானமாகச் சாப்பிட... ஜன்னலோரமாக உட்கார்ந்து எதிர் வீட்டை நோட்டமிட..... திருட்டுத்தனம் என்கிற குற்றவுணர்வு இல்லாமல் ஹாலில் உட்கார்ந்து சிகரெட் பிடிக்க... ராத்திரி விஸ்கி கலந்த சோடாவுடன் டி. வி. முன் அமர்ந்து 'ஸ்டார் மூவி' யில் கண்களை மிதக்கவிட....

இன்னும்... இன்னும் ... எத்தனையோ விஷயங்களுக்குத் தனிமை தேவைப்படுகிறது.

அதெல்லாம் சுற்றி இருக்கிறவர்களுக்குப் புரியாது. அதுவும் கிட்டாவின் மனைவி சுலோச்சனாவுக்குப் புரியவே புரியாது.

அந்த வீட்டையே – புருஷனையும் சேர்த்து அவள்தான் ஆட்சி செய்து வந்தாள். அவளுக்கு முன் கிட்டாவின் தாயார்.

ஒவ்வொருத்தியும் ஒரு விதம்!

அம்மாவுக்கு இரைச்சலே ஆகாது. கதவை வீசிச் சாற்றினால் 'படபட' வென நெஞ்சு அடித்துக் கொள்வதாகச் சொல்லி, பெரிசாகச் சத்தம் போடுவாள்!

"கடங்காரா... ஏண்டா இப்படிச் சத்தப்படுத்தறே... நான் மாரடைச்சு சாகணுமா.....? அடேய், அந்த ரேடியோவைச் சின்னதாதான் வையேன்... இங்கே எல்லாருக்கும் காது நல்லாதானே இருக்கு. இந்தா, இந்தா... எதுக்கு இப்படிக் கத்தறே... அரப்புப்பொடி வேணுமானா அழகா சொல்லத் தெரியாதா.... அதுக்காகப் பேய் இரைச்சல் போடணுமா?"

அம்மாவின் சத்தத்துக்குப் பயந்து, அந்த வீடே ஒரு மௌனப்படம் மாதிரி தினமும் இயங்கும். ஆபீஸுக்குப் போகிற அப்பா, அம்மாவின் அருகில் வந்து நின்று, பவ்யமாகக் கைகட்டி வாய்பொத்தி, "அப்ப நான் ஆபீஸுக்குக் கிளம்பட்டுமா" என்றுதான் கேட்பார். அந்த வீட்டில் பிறந்த குழந்தைகூட, வாய்விட்டு அழாமல் பெரிய மனுஷன் மாதிரி கண்ணீர் விட்டு அழும்.

அப்படியொரு ஆளுகையில் வாழ்ந்த அப்பா – காய்கறி வாங்க மாடவீதிக்குப் போனால், காட்டுக் கத்தல் கத்துவார். ஒன்றுமில்லாத விஷயத்துக்கெல்லாம் எகிறிக்குதிப்பார்.

"ஏஞ்சாமி ..... இந்தக் கத்து கத்தறே... கொஞ்சம் நிதானமாதான் பேசேன்...."

"நீ யாரு என்னை அடக்கறதுக்கு! கொஞ்சம் எடம் கொடுத்தாப் போறும்... தலைக்கு மேல் ஏறிடுவீங்களே! நான் யார் தெரியுமா...?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நீ யாரா இருந்தா எனக்கென்ன... வாங்கினா வாங்கு. இல்லாட்டி நடையைக் கட்டு..."

தெரு முழுக்க ருத்ரதாண்டவம் ஆடிவிட்டு, வீட்டுக்குத் திரும்பும்போது தெருமுனையிலேயே நாலு வெற்றிலைப் பாக்கைப் புகையிலையுடன் வாயில் அதக்கிக் கொண்டுதான் நடப்பார் அப்பா.

அதெல்லாம் அந்தக் காலம்.

சுலோச்சனா அப்படியெல்லாம் கொடுமைப்படுத்தியதே இல்லை. பார்க்கப் போனால், அவளுக்கும் மாமியாருக்கும் ஆகாமல் போனதே சுலோச்சனாவின் தொண்டை விஷயமாகத்தான்.

தனிக்குடித்தனம் கூட அதனால் தான்.

சுலோச்சனாவின் விருப்பு, வெறுப்புகள் வேறுவிதமாக இருந்தன.

அவளுக்கு – அவளையும் அவளது இரண்டு குழந்தைகளையும் அவளது புருஷனையும் பிறந்த வீட்டு மனிதர்களையும் தவிர, வேறு ஈ, காக்கையைக் கூடப் பிடிக்காது.

ஈ, காக்கை என்றால், நிஜமாகவே ஈ, காக்கைதான்! இன்னும் பல்லி, எறும்பு, கரப்பான் பூச்சி, எலி... இப்படி மனிதர்களை அண்டிவாழும் எந்தவொரு ஜீவனையும் பிடிக்காது. இதில் கிட்டுவின் கூடப்பிறந்தவர்களும் நண்பர்களும் கூட அடக்கம்.

"அடியே ..... யாரங்கே.... அப்பாவைக் கூப்பிடு. முதல்ல அந்தச் சனியன் புடிச்ச பல்லிய விரட்டு...."

"இந்தாங்க... பரண்லே என்னமோ கரமுரன்னு சத்தம். எலி இருக்குன்னு நினைக்கிறேன். நாளைக்கு லீவு நாள்தானே.... எலிப்பொறியில தேங்காய்த் துண்டை வெச்சுப் பிடிக்கறது உங்க வேலை..."

"எத்தனை தடவை சொல்றது..... சாக்கடை சல்லடையத் தனியா எடுத்து வைக்காதீங்கன்னு... பாருங்க. ஒரே கரப்பு சாம்ராஜ்யம். பார்த்துவிட்டு நிக்கறதுக்கா கூப்பிட்டேன்? துடைப்பத்தை எடுத்து நாலு சாத்துச் சாத்துங்களேன்...."

இப்படி, இந்த வாயில்லா ஜீவன்களை வதைப்பது போலவேதான், கிட்டாவைச் சேர்ந்தவர்களையும் சொல்லுவாள்.

"உங்க ஃபிரண்டு சுப்புணி வந்தா வாசல்ல நிக்க வெச்சே பேசி அனுப்புங்க... தெரு மண்ணை எல்லாம் செருப்புல அள்ளிட்டு வர்றார். சோபாவுல சாய்ஞ்சு உட்கார்ந்து, குஷன் கவர் எல்லாம் திட்டுத்திட்டா எண்ணெய்ப் பிசுக்கு... மனுஷனுக்குச் சுத்தம்னா என்னன்னே தெரியலை...."

"இப்பவே சொல்லிட்டேன்.... உங்க அக்கா வந்தா – இந்தத் தடவை நான் 'பளிச்'சுனு சொல்லிடப்போறேன். ஒரு சாமானை எடுத்தா எடுத்த எடத்துல வைக்கிறதில்லே... போன ஞாயிற்றுக்கிழமை வந்துட்டு 'ஹிண்டு' பேப்பர் அடுக்கி வச்சதை எல்லாம் தலைகீழா புரட்டிப் போட்டுட்டுப் போயிட்டா. அவ வீடுன்னா இப்படித்தான் செய்வாளா?"

இன்று நேற்றில்லை. இருபத்தைந்து வருடங்களாக இதுதான் வாழ்க்கை.

பெண்டாட்டி, குழந்தைகளுக்காக நிறைய நட்பை, நிறைய உறவுகளை வாசலோடு நிறுத்தியாயிற்று.

சுலோச்சனாவுக்கு அழுக்கு சுப்புணியைத்தான் தெரியும். அந்த சுப்புணி, கிட்டாவுக்காக வருஷக் கணக்கில் கல்லூரி சம்பளம் கட்டியது தெரியாது... அப்பாவுக்குக் கிடைத்த சம்பளத்தில் குடும்பம் நடந்ததே பெரிசு.

"நீயும் என்னோட சேருடா கிட்டா.... நானிருக்கேன்...."

இன்றைக்கு கிட்டா ஓர் உயர் பதவியில் இருப்பதற்கே சுப்புணிதான் காரணம். அதற்கென்ன செய்வது... சுப்புணியின் அதிர்ஷ்டம், ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு வருடம்.... இப்போது, பத்து இருபதுக்கே திண்டாட்டம். கேட்கமாட்டான். கிட்டாவாகவே அக்கம்பக்கம் பார்த்துத் தரவேண்டும்.

அந்தப் பத்து இருபதுக்கெல்லாம் சுலோச்சனாவிடம் திட்டுவாங்க வேண்டும்.

"எப்பவோ உதவி செஞ்சார்னா..... அதுக்காக இப்படியா அள்ளிக் கொடுத்துட்டே இருக்கணும்! உங்க நெத்தியிலதான் ஏமாளின்னு எழுதி ஒட்டியிருக்கே...."

கரப்பான் பூச்சியைக் கிட்டா அடிக்கிற அடியை விடவும், சுலோச்சனாவின் வார்த்தைகளினால் உண்டாகும் வலி கிட்டாவின் நெஞ்சுக்குள்ளே 'சுளீரென' இம்சிக்கும்.

அதுபோலத்தான் கிட்டாவின் அக்காவும். அந்த நாளைய எஸ். எஸ். எல். சி! பள்ளிக்கூடத்தில் ஆசிரியை... அப்பாவின் கை ஒய்ந்த போது, குடும்பத்தையே தாங்கினாள். 'தம்பி முன்னுக்கு வரும்வரையில் கல்யாணமே செய்து கொள்வதில்லை' என்று தீர்மானமாக நின்றாள். முப்பத்திரண்டில் கல்யாணம். நாற்பதில் வைதவ்யம். இன்று வரையில் பெற்றோரை அவள்தான் கவனித்து வருகிறாள். அவள் மட்டும் 'என்னால் முடியாதுடா' – என்று சொல்லி விட்டால், கஷ்டமோ நஷ்டமோ பெற்றோரைக் கிட்டாதான் வைத்துப் பராமரிக்க வேண்டும்.

'அதெல்லாம் தெரியவில்லை இவளுக்கு. என்னமோ பேப்பர் கலைந்து கிடப்பதற்குச் சொல்ல வந்துவிட்டாள்....'

நினைத்துக் கொள்வானே தவிர, வாய் திறந்து சொல்லமாட்டான்.

www.tamilarangam.net

'நமக்கு வேண்டியவர்களை வரவழைச்சு, உட்கார வெச்சு பேசமுடியாத வீடு என்ன வீடு...'

பிரசவத்துக்குக் கூட சுலோச்சனா பிறந்த வீட்டுக்குப் போனதில்லை. எல்லாமே இங்கேதான். எங்காவது கல்யாணம், விருந்து என்றால் கிட்டாவும் கூடவே போகவேண்டியிருக்கும். கிட்டாவின் இரண்டு பெண்களும் அச்சு, அசல் அம்மாவேதான். சில சமயங்களில் சுலோச்சனா, தனது பெண்களின் பொறுப்பில் வீட்டை விட்டுவிட்டுப் போவாள்.

"அப்பா சுப்புணி மாமாகிட்ட அதிகம் பேச்சு வெச்சுக்க வேண்டாம்னு அம்மா சொல்லியிருக்கா இல்லே... அப்புறம் எதுக்குக் கூப்பிட்டு உட்கார வெச்சீங்க..... அம்மா வரட்டும் சொல்றேன்."

பத்து வயசுப் பெண்கள் யூனிஃபார்ம் போடாத போலீஸ் மாதிரி விரட்டும் போது, கிட்டாவுக்கு வாழ்க்கையே வெறுத்துப்போகும்.

'இப்போது – காரணமில்லாமல் ஒரு கரப்பான் பூச்சியின் மீது அன்பு ஏற்பட்டதுகூட இந்த வெறுப்பினால் இருக்கலாமோ?'

தெரியவில்லை. ஆனாலும், கிட்டா குளியலறைக்குள் கால்வைக்கும் போதெல்லாம் சுதந்திரமாக வெளியே உலாவிக் கொண்டிருக்கும் அந்தக் கரப்பான் பூச்சி, காலடி ஓசை கேட்டு அவசரமாகப் பம்மிப் பதுங்கும்..... அப்போதெல்லாம் கிட்டாவுக்குச் சிரிப்பாய் வரும்.

'ச்சே... என்ன பயம்.... நான்தானே...'

இந்த ஐந்து நாட்களில், அக்காவை அழைத்து வந்து பேசினான். அவள் கையால் சுடச்சுட தோசை வார்த்துப் போடச் சொல்லி, பச்சை மிளகாய் புளிப்பச்சடியுடன் ரசித்துச் சாப்பிட்டான். சுப்புணியையும் வரவழைத்து, பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு அவனையும் சாப்பிடச் சொல்லி உபசரித்தான்.

முதல் இரண்டு நாட்கள் தயங்கிய சுப்புணி, இப்போதெல்லாம் தானே சமையலறை வரையில் வந்து பொட்டுக்கடலையும் சர்க்கரையும் சுவாதீனமாய் எடுத்து வாயில் போட்டுக் கொள்கிறான்.

அந்தக் கரப்பான் பூச்சி கூட,

இப்போதெல்லாம் கிட்டாவின் காலடி ஓசை பழகியதாலோ, இல்லை – இந்த மனிதனால் தனக்கு எந்தவொரு ஆபத்தும் இல்லை என்பதினாலோ – தைரியமாக வெளியில் திரிகிறது. கிட்டா, அதன் மீது கால் பதியாமல் தாவி நடக்கப் பழகிக் கொண்டான்.

சுப்புணியுடன், சில சமயங்களில் அக்காவுடன் பழைய நாட்களை அசைபோட்டு, இரவு பன்னிரண்டு மணிக்கு மேலும் விழித்திருந்து பேசி, டி. வி. பார்த்து...

"சுப்புணி! ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னால் நீயும் நானும் ராஜாராமன் வீட்டுல – அவன் பெண்டாட்டி ஊருக்குப் போயிருக்கறச்சே பாட்டும், பாட்டிலும், சீட்டுக் கச்சேரியுமா கொட்டமடிச்சோமே, ஞாபகமிருக்கா....?"

"ஆகா...."

"இப்ப அவன் எங்கேடா ஆளையே காணம்...?"

"எல்லாம் உன்னை மாதிரிதான்... வட்டத்தைச் சுருக்கிக்க வேண்டிய அவசியம். வொய்ஃபோட டாமினேஷன்."

கிட்டா, கண்களை மூடிக் கொண்டான்.

இதோ....... நாளைக்கு விடிகாலையில் சுலோச்சனா வந்துவிடுவாள்.

'பொட்டுக்கடலை பாட்டிலை யார் திறந்தது.... சரியா மூடலே.'

'ஃபிரிஜ்லே கறுப்பா லேகியம் மாதிரி என்னது இது.... மிளகாய் பச்சடியா – யாரு, உங்க அக்கா வந்தாளாக்கும். நாளைக்கு வயித்தைப் பிடிச்சிட்டு நீங்க அவஸ்தை படறப்ப – அவளையே கூப்பிட்டு டாக்டர் கிட்ட அழைச்சிட்டுப் போகச் சொல்லுங்க......'

நினைத்துக் கொண்டாற்போல எழுந்து போய் பொட்டுக்கடலை பாட்டிலை ஒழுங்காய் மூடிவைக்கிறான். பச்சை மிளகாய்ப் பச்சடியை மனசேயில்லாமல், வாசல் குப்பைத் தொட்டியில் கொண்டுபோய்க் கொட்டிவிட்டு வருகிறான்.

"ஓ... நாளைக்கு வொய்ஃபும் குழந்தைகளும் ஊர்லேயிருந்து வர்றாங்களாக்கும்....."

சுப்புணியின் கேள்விக்கு அசடு வழியச் சிரிப்பதைத் தவிர, வேறெதுவும் சொல்லத் தோன்றவில்லை கிட்டாவுக்கு.

அக்கா, அன்றிரவே புறப்பட்டு விட்டாள்.

மறுநாள் இரவு... சுலோச்சனா வந்து.... சமையலறையே தலைகீழாக மாறி விட்டதாகப் புலம்பி, யார் யார் வந்து போனார்கள் என்று தூண்டித்துருவி, ஊரில் எல்லோரும் அவளை ஏகமாய் இளைத்துவிட்டதாய்ச் சொன்னதாகப் பெருமை பொங்கச் சொல்லி, கலைந்த பேப்பரை எரிச்சலுடன் அடுக்கி, மிதியடி மண்ணை உதறி... பாத்ரூமுக்குள் அடியெடுத்து வைத்தவள் கூச்சலிட்டாள்.

"அய்யய்யோ... கரப்பு... என்ன, உங்களைத்தானே... இங்கே வாங்களேன்....."

www.tamilarangam.net

கிட்டா பொட்டில் அடிபட்டாற் போல நின்றான்.

'ஓ..... நம்ம ஃப்ரெண்டு.... அய்யோ.... அடிச்சு துவம்சம் பண்ணச் சொல்லுவாளே.....'

கிட்டா, மனைவியைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"பார்த்துட்டு நிக்கறதுக்கா கூப்பிட்டேன்?"

கிட்டா, சட்டென துடைப்பத்தை எடுத்து ஒப்புக்கு ரெண்டு போடு போட்டான்......

'நண்பா... போய் விடு. இல்லா விட்டால் தொலைந்தாய்'.

அவன் மானசீகமாய்க் கரப்பான் பூச்சியிடம் கெஞ்ச, அதுவோ இவன் மீது ஏற்பட்ட அதீத நம்பிக்கையில் பயமின்றி, சுவரோரமாய் நகர....

'நற நற' வெனப் பல்லைக்கடித்த சுலோச்சனா, பூச்சி மருந்து அடிக்கும் கருவியைக் கொண்டுவந்து கணவனின் கையில் திணிக்கிறாள்.

"இதை அடிங்க.... துடைப்பத்தாலே அடிச்சா சாகாது.... ஃபிளிட்தான் சரி. அடிங்க..."

"சீச்சீ இத்தனூண்டு கரப்புக்குப் போய்...."

"நாளைக்கே இது படையாப் பெருகிடும்..."

அந்தக் கணத்தில் சுலோச்சனா தாடகை மாதிரி நின்றாள்.

கிட்டா வேறு வழியின்றி, ஒரு சர்வாதிகாரியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த சிப்பாய் மாதிரி செயற்படுகிறான். விழிகள் அவனது அனுமதியை மீறி கண்ணீரைப் பெருக்கின.

இரவு–

படுக்கையில் படுத்து, சுவரையே வெறித்துக் கொண்டிருந்தான் கிட்டா....

"ஃபிளிட் அடிச்சீங்களே... கைய நல்லா வாஷ் பண்ணினீங்களா....?"

"பண்ணினேன்னுதான் நினைக்கிறேன்....."

"அதெல்லாம் சொன்னாலே செய்யமாட்டீங்க..... சொல்லாமதான் செய்யப்போறீங்களாக்கும். போய் வாஷ் பண்ணிட்டு வாங்க....."

அவன் பாத்ரூமுக்குள் போகிறான்..... அவனது நண்பனின் சடலம் ஜலதாரையின் அருகே....

"உனக்குத் தெரியாது நண்பா... மனித ஜாதியில் நிம்மதி வேண்டுமானால் பெண்டாட்டியின் சொல் படி நடக்க வேண்டியிருக்கிறது. என்னை மன்னித்து விடு!"

கிட்டா ஒரு கணம் நின்று, மல்லாந்து கிடந்த கரப்பானிடம் மானசீகமாய் மன்னிப்புக் கேட்கிறான்.

# கதறி அழும் தமிழே.....

தன் நிலை அறிய தமிழ் மொழி இங்கு வந்தால் ..........

குங்குமத்தை காணாத குலமகளிர் காணும் இங்கே
மங்கலமாம் மஞ்சள் மறந்த முகம் காணும்
"தாலி தேவை தானா?" என்ற தர்க்கங்கள் காணும் – வெறும்
கேலிக் கூத்தான சில திருமணங்கள் காணும்

கார் குழலைக் கத்தரித்த காரிகையைக் காணும் – இரு
காது குத்தித் தோடுவைத்த காளையரைக் காணும்
பூவாடை காணாத பூமகளின் கூந்தலிலே
புதிய பல வண்ணங்களில் பூச்சுக்களை பார்க்கும்

பெரியோரை வணங்காத இளையோரைக் காணும் – அவரே
பெரியோரைப் பெயர் சொல்லும் பெரிய துயர் காணும்
கண்டதெல்லாம் போதும் என்று கதறி அழும் தமிழே – தான்
கொண்ட துயர் போதும் என்று கொள்ளும் மீளாத் துயிலே.

கவிஞர் ஜெயசிங்கம் ஹமில்ரன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையும் ஸ்ரீலங்காவும்

- அ. பி. மாசிலாமணி, சிங்கப்பூர் -

இராமாயணத்தில் வருகின்ற இலங்கையும் இன்றுள்ள ஸ்ரீலங்காவும் வெவ்வேறு தீவுகளென்று சிலர் வாதிடுகின்றனர். கோதாவரி ஆற்றின் கழிமுகத்தில் உள்ள ஒரு சிறு தீவே இராமாயணத்தில் கூறப்பட்ட இலங்கையென்று இவர்கள் கூறிக்கொள்கின்றனர்.

இந்தியத் தீபகற்பத்தில் வாழ்வோர் ஸ்ரீலங்காவை என்றுமே "தென்னிலங்கை" என்று குறிப்பிட்டு வந்துள்ளமையை உலக வழக்கிலிருந்தும், செய்யுள் வழக்கிலிருந்தும் நாம் நன்கறியலாம். பட்டினத்தடிகள் தம் பாடலில்:

"முன்னையிட்ட தீ முப்புரத்திலே,
பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்;
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே,
யானுமிட்ட தீ மூள்கமூள்கவே."

என்றல்லவா பாடியுள்ளார்? இந்தப்பாடலின் பொருள் மிகத்தெளிவாகவே உள்ளது. இதில் ஸ்ரீலங்கா 'தென்னிலங்கை' எனக் குறிக்கப்பெற்றுள்ளது. அனுமான் இலங்கையைத் தீயிட்டுக் கொளுத்தியதைக் குறிக்கிறது. இப்பாடலின் இரண்டாவது வரி.

இலங்கை என்று ஸ்ரீலங்காவைக் குறிக்கும் வழக்கு தொன்றுதொட்டு நிலவுவதென்பதை இதிலிருந்து அறியலாகும். இப்பெரு வழக்கை மறுத்து வெற்றி பெறுவதற்கு ஆழ்ந்த சான்றுகள் தேவைப்படும்.

இராவணனைக்கொன்ற பின்பு இராமபிரான் இங்குதான் சிவபூஜை செய்து பிழை பொறுத்தருளுமாறு வேண்டிக்கொண்டார் என்று கூறப்படுகிறது. இராமேஸ்வரம் ஸ்ரீலங்காவுக்கு அருகில் நீரிணைக்கப்பாலுள்ள தென்பது யாவரும் அறிந்ததே.

இராமேஸ்வரம் பற்றிய இச் செய்திகள் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் ஏனை இந்தியமொழிகளிலும் காணப்படுவன.

இதிகாசம் ஒருபுறம் இருக்க இராமேஸ்வரத்திலிருந்துதான் அரசன் இராமன் படைப் பிரிவுகளைப் பார்வையிட்டு நிலைமையைக் கணித்தறிந்து கொண்டு "தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கி" – நீரிணை கடந்து போர்க்களம் புகுந்தானென்றறியலாம்.

கோதாவரிக்கரையில் இது நடைபெற்றிருக்குமானால் ஏன் இராமேஸ்வரத்தில் சிவபூசை செய்ய வேண்டும்? ஆகவே இலங்கையென்று இராமகாதையில் குறிக்கப்பெற்றது ஸ்ரீலங்காவே என்று தெளிக.

கற்பாறையில் மனிதப்பாதம் போன்று பதிந்துள்ள "இராமபாத" மும் அங்குள்ளது. இங்கு நின்றுகொண்டுதான் தான் நிகழ்த்தவிருந்த போரைப்பற்றிய திட்டங்களை அரசன் இராமன் தீட்டியிருக்க வேண்டும்.

தாய்லாந்திலும் ஒரு அயோத்தியா உள்ளது. அங்குள்ள அரசர்கள் தங்களை "முதலாம் இராமன்" "இரண்டாம் இராமன்" "மூன்றாம் இராமன்" என்றெல்லாம் பெயர் கொண்டு பட்டம் சூட்டிக்கொள்கின்றனர். மேலும் மலேஷிய நாட்டின் மேற்குக் கரையில் "லங்காவி" என்றொரு தீவுமுள்ளது. ஆகவே நாம் ஏன் இராமன் தாய்லாந்தரசனென்று கொள்ளக்கூடாது? தாய்லாந்துக்காரர்கள் சிலர் இராமனைத் தங்களரசனென்று கூறிக்கொள்கின்றனரே! அப்படியானால் மலேஷிய நாட்டின் "லங்காவி" தான் இலங்கையென்னும் ஸ்ரீலங்காவோ?

இதற்கான விளக்கம்: இராமபிரான்பால் வைத்திருந்த பக்தியின் காரணமாகவே தாய்லாந்துக் காரர்கள் அங்ஙனம் மகுடப்பெயர் மேற்கொள்கின்றனர் என்பதாம்.

இங்ஙனமே கோதாவரி லங்காவுக்கும் கொள்ள வேண்டும். அங்கு இராவணன் பால் உள்ள பற்றுதல் காரணமாக அவர்கள் தங்களை இராவணன் வழிவந்தோர் என்று கூறிக்கொண்டனராதல் வேண்டும். அது இராவணன் ஆண்ட பெருநாட்டின் ஒரு பகுதி என்பது தெளிவு.

இராவணன் இலங்கையரசன் என்பது இராமாயணத்தின் வாயிலாக நாமறிவதாகும். இலங்கையென்னும் பெயருள்ள இன்னொரு தீவுள்ளதென்றால் அது இராவணப்பேரரசின் ஆட்சிக்குட்பட்ட தீவுகளிலொன்று என்று கொள்வதே அறிவுடைமை. ஏனெனில் இராவணன் ஒரே ஒரு தீவைத்தான் ஆண்டான் என்று நிறுவ இயலாது. கோதாவரி அருகிலுள்ள தீவையும் தன் ஆட்சிக்குட்படுத்தி ஆளுநர் ஒருவரை அமர்த்தி ஏன் இராவணன் ஆண்டிருக்கக் கூடாது?

இராவணன் ஒரே ஒரு போரை மட்டும் நிகழ்த்தியவனுமல்லன்; அதேபோல ஒரே ஒரு தீவை மட்டும் ஆண்டவனுமல்லன். குறுந்தொகை 38ம் பாடலில் அவன் கைலாசமலையையும் தாக்கினான் என்றும் அதில் அவன் வெற்றி பெறவில்லை என்றும் சொல்லப்படுகிறது. கைலாசமென்றது ஆரியர் வாழ்ந்த மலையை. இது இந்தியாவிலுள்ள ஒரு மலையைக் குறித்ததே.

இராமாயணப்போரில் இராமன் இராவணனின் மூலப்படையை அழித்தான். இராவணனுக்கு ஆறுவகைப்படைகளும் இருந்தன என்றறிகிறோம்.

ஆகவே சிங்களவர்கள் வர முன்பே திராவிடர்கள் இலங்கையை ஆண்டிருந்தனரென்பது அறியப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் ...



*இன்று உலகம் முழுவதும் தமிழர்கள்.*
*வாழ்வு துன்பம் எனினும்*
*தமிழ் வளர்க்கும் எண்ணத்தில் சோர்வில்லை.*
*பல நாடுகளிலும் வாழும் தமிழ் உள்ளங்கள்*
*தமிழ் பரப்பும் நோக்கமாய் பல சஞ்சிகைகளை வெளியிடுகின்றன.*
*'வெண்ணிலவு' மூலம் அச் சஞ்சிகைகளை தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு*
*அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.*

## சர்வதேசதமிழர்

(நோர்வே)

ஆசிரியர் : என்.எஸ்.பிரபு

தமிழர்களை அவர்களின் முன்னேற்றம், ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே சஞ்சிகை இது. அளவில் பெரியது. தொடர்பு கொள்பவர்கட்கு பிரதிகளை இலவசமாக அனுப்பிவைக்கிறார் பிரசுரிப்பாளரும் ஆசிரியருமான பிரபு உலகின் பல பாகங்களிலும் உள்ளவர்கட்கு சர்வதேசதமிழர் தபாலில் கிடைக்கிறது. ஏராளமான செய்திகள், கவிதைகள், பேட்டி என அசத்துகிறார் ஆசிரியர். அவ்வப்போது தத்தம் நாட்டு நகரச் சிறப்பிதழ் வெளியிட்டு பெருவிருந்து படைக்கின்றனர் வாசகர்கள்.

ஏராளமான புகைப்படத் துண்டுகளை தொகுத்து அட்டைப்படத்தில் தாங்கி வந்த சர்வதேசதமிழர் தற்போது அழகிய முறையில் வடிவமைக்கப்பட்ட அட்டையில் ஒன்றிரண்டு படங்களுடன் கவர்ச்சியாக உள்ளது. தமிழ்நாட்டில் இந்த இதழிற்கு நல்ல செல்வாக்கு உண்டு என்று சஞ்சிகையின் வாசகர் கடிதம் செப்தி சொல்கிறது.

உலகம் பூராவும் "கௌரவ இணைப்பாளர் / நல்லெண்ணத் தூதுவர்" என்ற பணியில் பலரை ஈடுபடுத்தியுள்ளார் பிரபு என்றழைக்கப்படும் நல்லையா சண்முகப்பிரபு. இவர் யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று பின் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விவசாயத்தில் பட்டம் பெற்றவர். இலண்டனில் பத்திரிகைத் துறையில் டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ளார். பேராதனையில் படித்த காலையில் 'மதுரம்' என்ற சஞ்சிகையை தன்னந்தனியனாக நடத்திச் சாதனை படைத்தவர்.

இலவசமாக எப்படி உலகம் பூராவும் அனுப்பிவைக்கலாம் என வியப்பவர்கட்கு இந்தச் செய்தி. சந்தா செலுத்தி உதவும்படி வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. நோர்வே தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கு வருட சந்தா 15 அமெரிக்க டொலர்கள் மட்டுமே.

சஞ்சிகையை நேசிப்பவர்கள் சந்தா செலுத்துகின்றனர்.

ஆசிரியரின் தொடர்பு முகவரி:
N.S.Pirabu
L. HERVIGS VEI 69, 3035 DRAMMEN, NORWAY
மின்னஞ்சல் (Email) : nsp@sn.no.

## தமிழ் ஒளி

(நியூசிலாந்து)

நிறுவன ஆசிரியர் : எஸ்.கருணாநிதி.

நியூசிலாந்தில் ஆக்லாந்திலிருந்து வெளிவரும் முதலாவது தமிழ்ச் சஞ்சிகை இது என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் தமிழ் ஒளி ஆசிரியர் கருணாநிதி கைக்கடக்கமான அளவில் சிற்றிதழ் ஒன்றை இரு மாத இதழாக இலவசமாக வெளியிடுகிறார்.

தமிழக அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்களால் பெயர் சூட்டப்பட்ட இந்த சஞ்சிகையின் முதல் இதழ் (சித்திரை – வைகாசி) அன்னாரின் வாழ்த்துடன் வெளிவந்துள்ளது. தமிழன்னைக்கு இவ்விதழைச் சமர்ப்பித்திருக்கும் நிறுவன ஆசிரியர் கருணாநிதி "இங்கு இருக்கும் தமிழ் மக்களுக்குப் பயன்படும் வகையில் தொடர்ந்து தொண்டாற்ற " உறுதி பூண்டிருக்கிறார்.

தமிழ் ஒளியின் தமிழ்ச் சுவையைக் காட்ட முனைவர் அர்த்தநாரி எழுதிய 'வார்த்தையில்லா ஜாலம்' ஆக்கத்தில் இருந்து... *"இளங்காலைக் குளிரில், இருட்டில் நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். தூரத்தில் மாங்கரே பாலம் வெளிச்சமாலை போட்டு கொண்டிருந்தது. நகரத்து விளக்குகள் நகை அலங்காரம் செய்தன. மனித நாகரிகத்தின் இரைச்சல்கள் இன்னும் எழாத நேரம். நீண்ட நடைக்குப் பிறகு குன்றின் உச்சிக்கு வந்துவிட்டபோது, நீர்ப்பரப்பின் பின்னே தூரத்தில் மலைக் கீறல்களுக்கு மத்தியில் சின்ன நகத்துண்டு போல் தங்கமாய் உதயம். அந்த நேரம் மலைத்துப் போய்."*

ஆசிரியரின் தொடர்பு முகவரி:
THAMIZH OLLI
PO BOX: 57-021
OWAIRAKA, AUCKLAND, NZ.
மின்னஞ்சல் (Email): karun.sathaiah@clear.net.nz.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழ் மலர்

(ஆக்லாந்து, நியூசிலாந்து)
வெளியீடு : நியூசிலாந்துத் தமிழ்ச் சங்கம்.

கே.பாஸ்கரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 96,97 ல் வெளிவந்த இரு மலர்கள் என் கைக்குக் கிடைத்தன. அவற்றில் முதலாவது, அழகிய வண்ண அட்டையில் திருவள்ளுவரின் உருவப் படத்துடன் மலர்ந்துள்ளது. கவிதை, சிறுகதை, கட்டுரை, மாதர் மஞ்சரி என்று வழக்கமான அம்சங்களைக் கொண்ட இம்மலரில் சிறுவர்க்கான ஆக்கங்களும் இடம் பெற்றிருந்தன. ஆசிரியரின் கருத்துப் பக்கமும், சங்கத் தலைவரின் செய்தியும் முக்கியமான எண்ணக் கருத்துக்கள் சிலவற்றைக் கொண்டிருப்பதனை பார்த்த மாத்திரத்திலேயே புரிந்து கொள்ள முடிகிறது. தமிழ்ச் சிறார்களுக்கு தமிழ்க் கல்வி புகட்ட வேண்டியதன் அவசியத்தை ஆசிரியர் வலியுறுத்தும் போது, தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகளைத் தமிழ் மொழியில் நடாத்தத் தாம் மேற்கொண்ட தீர்மானத்தை மீள வலியுறுத்தி அதனை திறம்பட அமுல்படுத்த ஆதரவு கோரி நிற்கும் தலைவர் சிறீகரனின் முன் உள்ள பணிகள் இமயம் போல் குவிந்திருப்பது தெரிகிறது. இரண்டாவது இதழை மலர்விக்க முயன்று பயனற்றுப் போன கவலையை பாஸ்கரன் அவர்கள் தேன் தமிழ் மாலை என்ற கலை விழாவின் சிறப்பு மலரில் தெரிவித்துள்ளதோடு தனக்குக் கிடைத்த ஆக்கங்களையும் பிரசுரித்துள்ளார். அதில் கிடைத்த ஒரு கவிதை "வெண்ணிலவில்" மறு பிரசுரமாகிறது.

இந்த ஆண்டுக்கான தமிழ் மலரின் ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர் திருமதி சௌந்தரி சிவானந்தன் அவர்கள். யாழ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். வடமாராட்சி கரவெட்டி நகரில் பண்டிதர் பொன். கணேசனை தமிழ் உலகம் நன்கு அறியும். அவரின் புதல்வி சௌந்தரி என்பது ஆசிரியப் பணிக்கு அணி சேர்க்கும்; வலு சேர்க்கும் என அறியலாம். முதல் இதழ் மிக விரைவில் வந்துவிடும் !

## தமிழ் மஞ்சரி

(ஆக்லாந்து, நியூசிலாந்து)
வெளியீடு: உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம், நியூசிலாந்து.

''முழு விருப்புடன் எடுத்த முடிவல்ல இது. வாழ்க்கைப் பொறுப்புகள் மாறியதன் அறுவடையில் இதுவும் ஒன்று'' என்ற ஆதங்கத்துடன் இணை ஆசிரியர் பொறுப்பிலிருந்து தற்காலிகமாக விடுப்புப் பெற்றிருக்கும் சா.ச. சௌந்தரராஜன் அவர்கள் மூன்று ஆண்டுகள் இணை ஆசிரியப் பதவியில் தமிழ்ப் பணி புரிந்தவர். அண்மையில் வெளிவந்த தமிழ் மஞ்சரி ஆனி இதழில் ''மாற்றம்'' என்ற பொருளில் அவர் வரைந்த தலையங்கம் சிந்தனைக்கு நல்விருந்து. ஆனி இதழில் யாழ்க்குடா மற்றும் வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த சில பகுதிகளின் முக்கியமான சரித்திரச் செய்திகளும் சுவையாக இருக்கின்றன. வழக்கமான அம்சங்களுடன் குறித்த காலத்தில் வெளியிடப்படும் இம்மஞ்சரி, கழகச் செய்திகளையும், எதிர்கால நிகழ்ச்சிகளையும் தாங்கி வருகின்றது. குறுக்கெழுத்துப் போட்டியொன்று ஒவ்வோர் இதழிலும் இடம்பெறுகிறது. சிலவேளைகளில் தலையைப் பிசைந்தெடுக்கும் அளவு கடினமானவை அக்கேள்விகள்.

திருக்குறளுக்கு ஆங்கில விளக்கம் இன்னோர் வழமையான அம்சம். ஆக்கங்களை அனுப்புபவர்கள் பிரதியாக்கத் தயாரான நிலையில் அனுப்பும் ஆக்கங்கள் அப்படியே ஒளிப்படப் பிரதிசெய்யப்படுகின்றன. புதிய இணை ஆசிரியராகத் தெரிவாகியிருப்பவர் திரு. என். நடேசானந்தம் அவர்கள். மற்றைய இணையாசிரியராகத் தொடர்ந்து பணியாற்றி வருபவர் வைத்திய கலாநிதி மகேசன் இராசநாயகம் அவர்கள்.

## தமிழ் மகள் (கனடா)
## வெளியீடு: ஆதி அருள்நெறிமன்றம்

கனடாவில் புலவர் ஈழத்துச் சிவானந்தனை பிரதம ஆசிரியராகவும், திருமதி வசந்தா நடராசன், சித்திரா மணாளன் ஆகியோரை துணை ஆசிரியர்களாகவும் கொண்ட "தமிழ் மகள்" என்னும் மாதாந்த சஞ்சிகை "ஆதி அருள்நெறிமன்ற" வெளியீடாக வெளியிடப்படுகிறது. பதிப்பாளராக மீனா விளங்குகிறார். இச்சஞ்சிகையை ஆதி கணபதி சோமசுந்தரம் தமிழ்மக்களுக்காக இலவசமாக பதித்து வழங்குகிறார்.

இச்சஞ்சிகையில் இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த பல அறிஞர்களின் ஆக்கபூர்வமானதும் தமிழ் மக்களுக்குத் தற்போது வேண்டியதுமான கட்டுரைகள், கதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சஞ்சிகையின் முகப்பானது அறிஞர்களின் புகைப்படங்களால் அலங்கரிக்கப்பட்டு அன்பு, அறம், ஆளுமை பொருந்தியதாக உள்ளது.

www.tamilarangam.net



# கல்யாண சமையல் சாதம்! காய்கறிகளும் பிரமாதம்!



## "கிறீன்லண்ட்ஸ் ஒறியென்ரல் றெஸ்ரொறன்ற்"

### நம்பிக்கை தருகிறார் - டானியல்

"நியூசிலாந்தில் வாய்ப்புகள் நிறையவே தென்படுகின்றன. உரிய முறையில், கிடைக்கும் வளங்களை நாம் பயன்படுத்திக் கொண்டால் வெற்றி நிச்சயம். அதற்கு முன் எம்மைத் தயார் செய்ய வேண்டும். ஆங்கிலம் எமக்குத் தெரியாதா என்பதல்ல, அவர்களுக்குப் புரியும்படி எமக்குப் பேசத் தெரியுமா... என்பதே கேள்வி."

இவ்வாறு 'பட்'டென்று அதிரடியாகக் கூறும் அந்த இளைஞரைப் பார்த்த எவரும் பிரமிப்படையாமல் இருக்க முடியாது.

நோர்வேயில் மருத்துவப் படிப்பை முடித்துக் கொண்டு சில காலம் தொழில் புரிந்து விட்டு, சென்ற ஆண்டு நியூசிலாந்திற்கு குடிபெயர்ந்திருக்கும் அந்த இளைஞர் 32 வயதான லியோ டானியல் குணசீலன்.

யாழ்ப்பாணத்திலுள்ள சாவகச்சேரிக்கு அருகில் நுணாவில் கிராமம் சொந்த ஊர். யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரிக் கல்வி, யாழ் மருத்துவக் கல்லூரி வரை சேர்ப்பித்தது. மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவாகி இரண்டு வருடங்களில், "இது சரிப்பட்டு வராது" என நினைத்ததினால் 1987ல் நோர்வே சென்று மருத்துவப் படிப்பைத் தொடர்ந்தவர்.

ஆக்லாந்து நகருக்கு அண்மையில் உள்ளது எலர்ஸ்லி புறநகர். எலர்ஸ்லி பிரதான சாலை எனப்படும் அந்தக் குறுகலான சந்தடி மிக்க தெருவில், ஒன்றையொன்று நெருக்கிக் கொண்டிருக்கும் கடைகளுக்கு மத்தியில், கடும் பச்சை வர்ணத்தில் நிமிர்ந்து நிற்கிறது இருமாடிக் கட்டிடம் ஒன்று. அதன் முகப்பில் 'கிறீன்லண்ட்ஸ் ஒறியென்ரல் றெஸ்ரொறன்ற்' எனும் பெயர்ப் பலகை. வாசலில் 'இந்திய உணவுவகைகள்' என ஆங்கிலத்தில் எழுதப்பட்ட வாசகங்கள், கடந்து செல்வோரைக் கூவியழைக்கும் வண்ணம் கண்ணாடிக் கதவில் பளிச்சிடுகின்றன.

உள்ளே நுழைந்ததும், 'ஏதோ நட்சத்திர விடுதியோ?' என ஒரு கணம் திகைக்க வைக்கும் அழகான எளிமையான வரவேற்புக் கருமபீடம்.

அன்றலர்ந்த செந்தாமரையென
முகத்தில் மலர்ச்சி; புன்சிரிப்பு;
இன்சொல்; இவற்றுடன் ஒரு சீன இளைஞர்.
எந்நேரமும் பம்பரமாய்......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ளே............

சிறிய கூட்ட அறையில் திரு. டானியலுடனான உரையாடல் ஒரு புதிய அனுபவம். மூன்று பொறியியலாளர்களுடன் இணைந்து 'கிறீன்லண்ட்ஸ்' உணவு விடுதியை இரண்டு மாதங்கட்கு முன் ஆரம்பித்தவர். திடசித்தமும் நம்பிக்கையும் கொண்டவராகக் காணப்படும் இவர், நியூசிலாந்தில் எமது தமிழ் மக்கள் பலம் மிக்க ஒரு சமூகமாக மாறுவர் என அடித்துச் சொல்கிறார்.

தமிழர்கள் விரும்பியுண்ணும் சுதேச உணவு வகைகளைப் பெற்றுக் கொள்ளும், ஓர் உணவு விடுதியின் தேவையினைப் புரிந்து கொண்டு, துணிந்து செயலில் இறங்கியவர். "முதல் மாதம் வரை நட்டத்தை எதிர்பார்த்த எனக்கு முதல் நாளிலேயே இலாபம் காட்டிய தொழில் இது" என்கிறார், பூரிப்புடன். மருத்துவத் தொழிலைக் கைவிட்டுவிட்டாரா? அது தான் இல்லை. நியூசிலாந்து மருத்துவக் கவுன்சிலின் பதிவு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யுமுகமாக தேவையான பரீட்சையின் முதல் பகுதியில் சித்தியடைந்து விட்டார். அடுத்த வாய்மொழிப் பரீட்சைக்காகக் காத்திருக்கிறார். அதற்குள் 'பிசினெஸ்' மூளை வேலை செய்திருக்கிறது.

எப்படியும் இரு வருடங்களில் உணவு விடுதியின் சுமுகமான நிர்வாகத்திற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதோடு, மருத்துவக் கவுன்சிலின் பதிவு வேலைகளையும் முடித்துக் கொண்டு, சொந்தமாக மருத்துவத் தொழில் ஆரம்பிக்கப் போகிறாராம். அதற்காக, உணவு விடுதியின் விசாலமான மேற்தளத்தைப் பயன்படுத்தப் போகிறார்.

வர்த்தகம் என்று முடிவு செய்தபின் உணவுத் துறையை நாடியதற்கு அவர் சொன்ன காரணம் 'ஆள் காரியக்காரன்' என்று எவரையும் கூற வைக்கும்.

1996 வர்த்தக விற்பனைப் புள்ளி விபரம் எடுத்திருக்கிறார். முக்கியமான துறைகளில் எல்லாம் விற்பனைகளில் வீழ்ச்சி தென்பட்டபோதும், உணவு வழுங்கல் துறையில் (**Food Retail**) 4. 5 வீதம் வளர்ச்சி கண்டிருப்பதை மனிதர் 'லபக்' என உள்வாங்கிக் கொண்டார்.

வர்த்தகத் துறையில் கால் வைப்பதானால் அனுபவமும், முதலீடும் தேவையல்லவா? தனக்கு நோர்வேயில் அனுபவம் உண்டு என்கிறார். முதலீட்டில் நண்பர்கள் கூட்டு உதவியிருக்கிறது.


இட்லி, இடியப்பம், பிட்டு, ரொட்டி, வடை போன்ற உணவு வகைகளுக்குப் பெரிதும் வரவேற்பு உண்டு என்கிறார்.

வேலையில் இருந்து வீடு திரும்ப நேரமாகிவிட்டதா? குழந்தைகளின் அட்டகாசத்தால் சமையல் ஆகவில்லையா? அவசரமாக நண்பர் வீடு சென்று திரும்ப வேண்டும். ஆனால் சமையலை என்ன செய்வது என்ற கவலையா? சிறுவர்கட்கு இடியப்பம் எப்படி இருக்கிறது என்று அடிக்கடி நினைவு படுத்த வேண்டுமா? கிறீன்லண்ட்ஸ் விடுதிக்கு ஒரு தொலைபேசி அழைப்பு போதும்! உணவு தயாராகிவிடும்.

நண்பர்கள், உறவினர்களின் ஒன்று கூடலாயினும், பிறந்த நாள் போன்ற வைபவங்களாயினும் தேவையான இடங்களில் கொண்டு சென்று சுடச் சுட விநியோகிப்பார்களாம். விலை மிகக் குறைவு என்பதில் திரு. டானியல் பெருமைப்படுகிறார்.

"எம்மவர்கள் நிறைய்வே தம்மை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. வாடிக்கையாளரைக் கண்டால் வாய் மூடி மௌனியாக இருந்தால் வியாபாரம் படுத்து விடும்.

## அழைப்பு



"முதல் மாதம் வரை நட்டத்தை எதிர்பார்த்த எனக்கு முதல் நாளிலேயே இலாபம் காட்டிய தொழில் இது."

"எம் சமூகத்தை மேம்படுத்த எடுக்கப்படும் சகல சமூகப் பணிகளுக்கும் 'கிறீன்லண்ட்ஸ்' ஆதரவளிக்கும்."

"முக்கியமான துறைகளில் எல்லாம் விற்பனையில் வீழ்ச்சி தென்பட்ட போதும் உணவு வழங்கல் துறையில் (Food Retail) 4.5 வீதம் வளர்ச்சி"

"இது நாள் வரையான அனுபவம் 'மிகக் கஷ்டமாக இருந்தது."

"எமது வழி முறைகளில் (Methodology) அல்லது அர்ப்பணிப்பில் ஏதோ ஒன்று குறைவுபடுகிறது. யாழ்ப்பாணச் சூழலை இங்கும் எதிர்பார்க்க முடியாது. நிர்வாகி - ஊழியர் உறவு இங்கு வேறு மாதிரி. சூழலுக்கு ஏற்ப எம்மை மாற்ற வேண்டியிருக்கிறது."

"நோர்வேயிலுள்ள தமிழர்களை அங்குள்ளவர்கள் தெற்காசியாவின் யூதர்கள் என்கின்றனராம். அவர்களின் கடின உழைப்பே அதற்குக் காரணம்; அவர்கள் கையில் பணம் தாராளமாகவே புழங்குகிறது."

"எம்முடன் இணைந்து இந்த வர்த்தகத் துறையில் முதலீடு செய்யவும், பணிபுரியவும் ஆர்வமுள்ள நண்பர்களை 'வெண்ணிலவு' சஞ்சிகையூடாக அழைக்கிறேன்."

-டானியல்-

www.tamilarangam.net



முகமலர்ச்சியோடு அவர்களை வரவேற்பதும், வாழ்த்துவதும், இன்சொல்லும் தான் ஊழியர்கட்குத் தேவையான முதல் தகுதி'' என்னும் அவரின் இது நாள் வரையான அனுபவம் 'மிகக் கஷ்டமாக இருந்ததாம்'.

''எமது வழிமுறைகளில் (methodology) அல்லது அர்ப்பணிப்பில் ஏதோ ஒன்று குறைவு படுகிறது. யாழ்ப்பாணச் சூழலை இங்கும் எதிர்பார்க்க முடியாது. நிர்வாகி – ஊழியர் உறவு இங்கு வேறு மாதிரி. சூழலுக்கு ஏற்ப எம்மை மாற்ற வேண்டியிருக்கிறது'' என்கிறார்.

''முதல் நாள் 10 பேர் வரை வருவார்கள் என்று எதிர்பார்க்க வந்தவர்களோ மொத்தம் எழுபது பேர். இரு ஊழியர்களை வைத்துக் கொண்டு ஒரு கட்டத்தில் வாடிக்கையாளரைச் சமாளிக்க முடியாமல் திணறிப்போனோம்'' என்கிறார் அவர். ஆனால் இப்போ வருபவர்கள் 'எமது உபசரிப்பில் முன்னேற்றம் தெரிகிறது' என்கின்றனர். ''உபசரிப்பின் தரமும் வேகமும் முன்னேற வேண்டும், முன்னேற்றுவோம்'' என்று மூச்சு விடாமல் கூறி முடித்தார் திரு. டானியல்.

வாடிக்கையாளரைக் கவர மற்றொரு ஆயுதமும் பிரயோகிக்கிறார். அதே தரத்திலுள்ள ஏனைய உணவுச் சாலைகளில் மிகக் குறைந்த 'மெனு' 14 டொலர்கள் என்றும் தன்னுடைய மிகக் கூடிய 'மெனு' வெறும் 12 டொலர்கள் தான் என்றும் கூறுகிறார்.



மேலும் சில கிளைகளைத் திறந்து வர்த்தகத்தை விரிவு படுத்த வேண்டும் என்ற திட்டத்துடன் இருக்கும் இவர் சிறந்த பங்காளர்களைத் தேடுகிறார். எல்லோரும் ஆலோசனைகள் தருகின்றனராம். ''முதலீட்டுடன் ஆலோசனை தருபவர்கள், சற்று கவனமாகவே ஆலோசனை தருவார்கள். ஏனெனில் அவர்கள் பணமும் அங்கிருக்கிறதே!'' என்று சிரிப்போடு கூறும் திரு. டானியல் தனது வேண்டுகோளை முக்கியத்துவத்துடன் பிரசுரிக்கும்படி வேண்டுகிறார். ''எம்முடன் இணைந்து இந்த வர்த்தகத் துறையில் முதலீடு செய்யவும், பணிபுரியவும் ஆர்வமுள்ள நண்பர்களை 'வெண்ணிலவு' சஞ்சிகையூடாக அழைக்கிறேன்'' என்கிறார் உறுதியாக.

கிவித் தமிழர் பற்றிய அவரின் எதிர்பார்ப்பு பிரமாதமாகத் தான் இருக்கிறது. நோர்வேயிலுள்ள தமிழர்களை அங்குள்ளவர்கள் தெற்காசியாவின் யூதர்கள் என்கின்றனராம். அவர்களின் கடின உழைப்பே அதற்குக் காரணம்; அவர்கள் கையில் பணம் தாராளமாகவே புழங்குகிறது என்னும் திரு.டானியல், அவர்களைப் போல் நியூசிலாந்திலும் நம்மவர் கடின உழைப்பாளிகளாக மாறலாம் என்கிறார். 'தனித்தனியாக எதுவும் சாதிக்க முடியாது. குழுவாக இயங்கினால் அதிக பயன் கிடைக்கும்' என்ற தன் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் திரு. டானியல், 'தமிழன் கழுத்தறுப்பான்' என்று தன்னிடம் கூறுபவர்களிடம் 'உன்னைக் கழுத்தறுத்தானா?' எனத் தான் கேட்பது வழக்கம் என்கிறார்.

அது சரி! நியூசிலாந்துத் தமிழ்ச் சமூக மேம்பாட்டிற்கு அவர் என்ன வகையில் தன் பங்களிப்பை வழங்குவார்? என்று கேட்க நினைப்பவர்கட்குப் பதிலாக ''இந்த உணவுச் சாலையே என் முதற்பணி! வேலைவாய்ப்பில் தமிழர்க்குத் தான் முன்னுரிமை. எம் சமூகத்தை மேம்படுத்த எடுக்கப்படும் சகல சமூகப் பணிகளுக்கும் 'கிரீன்லண்ட்ஸ்' ஆதரவளிக்கும்'' என்கிறார் திடமாக!

'கிறீன்லண்ட்ஸ்' எனும் போது பரிச்சயமான பெயராக இருக்கிறதே! ஏதாவது சென்டிமென்ட் காரணமா? எனக் கேட்ட போது ''அப்படியே வைத்துக் கொள்ளுங்களேன்'' என்று சிரித்தபடி கூறிய திரு. டானியல், பின்னர் ''கட்டிடத்தின் நிறமும் பச்சையாக இருந்தது; சுவையும் தரமும் என்று எண்ணுகையில் 'கிறீன்லண்ட்ஸ்' என்ற பெயர் ஞாபகம் வந்தது! அப்படியே வைத்துவிட்டோம்'' என்கிறார். மொத்தத்தில் டானியல் நிறைய நம்பிக்கை தருகிறார் என்பது உண்மை.

சந்திப்பு - ஆசிரியர்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புற்றுநோயைத் தவிர்க்கலாமா?

தகவல் தருகிறார் புற்றுநோய்ச் சிகிச்சை நிபுணர்
திரு. ஜெயசிங்கம் ஜெயமோகன்

தமிழ் மக்களில் பலர் புலம்பெயர்ந்து கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் இப்போது வாழ்ந்து வருகின்றனர். எமது வாழ்க்கை முறை எம்மை அறியாமல் மாறிக்கொண்டே வருகிறது. கூடவே, பலவிதமான நோய்கள் எம்மைத் தொற்றிக்கொண்டுவிட்டன. இருதய வியாதி, புற்று நோய் இப்படிப் பல!



இலங்கையில் புற்றுநோய் பற்றி அத்தனை விபரமாக நாம் கேட்டதில்லை. ஆனால் இப்போ, நமக்குத் தெரிந்த பலர் இந்நோயால் வாடுவதை அடிக்கடி கேட்கிறோம். இதற்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியமாக இலங்கை, இந்தியா போன்ற மூன்றாம் உலகநாடுகளில் மருத்துவ வசதிகள் குறைந்திருப்பதால் பலவிதமான புற்று நோய்கள் கண்டுபிடிக்கப்படாமலே பலர் இறந்து விடுகின்றனர். ஆனால் அபிவிருத்தியடைந்த நாடுகளில் இந்நோய்கள் விரைவிலேயே கண்டுபிடிக்கப்படுகின்றன. நவீன மருத்துவ உபகரணங்கள் புற்றுநோயை விரைவில் கண்டுபிடிக்க உதவுகின்றன.

அப்படியானால் புற்றுநோயைத் தவிர்க்கலாமா? முற்றாகத் தவிர்க்க இயலாவிட்டாலும் எம்மால் இயன்ற வரை புற்றுநோய் அபாயத்தைத் தடுக்க முயலலாம்.

## எப்படி......?

1. முதலில் புற்றுநோயை ஊக்குவிக்கும் பழக்கங்களை நிறுத்திக் கொள்ளலாம். புகைபிடிப்பவரின் நுரையீரல், சிறுநீர்ப்பை போன்ற உறுப்புகளில் புற்றுநோய் வருகின்றது. புகைபிடிப்பதனை முற்றாக நிறுத்துவதன் மூலம் இதனைப் பெருமளவில் தவிர்க்கலாம். புகைபிடிப்பவர் மட்டுமல்லாது அவருடைய குடும்பத்தவர் கூட இந்தப் புகையைச் சுவாசிப்பதனால் புற்றுநோய்க்கு ஆளாகின்றனர்.

2. எமது உணவுப் பழக்கங்களை மாற்றிக்கொள்ளலாம். எமது அன்றாட உணவில் மரக்கறிகளை அதிகம் சேர்ப்பதோடு, சிவப்பு இறைச்சி வகைகள் எனப்படும் ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி என்பனவற்றைத் தவிர்க்க வேண்டும். கூடியளவில் பழவகைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

3. ஒழுங்காக மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். உதாரணமாக மார்பகத்தில் புற்றுநோய் வருவதை 'மமோகிராம்' (mammogram) என்ற எக்ஸ்றே பரிசோதனையால் ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துவிடலாம். இதனால் அறுவைச் சிகிச்சை மூலம் இந்த நோயைக் குணப்படுத்திவிட முடியும். பல மேலை நாடுகளில் இந்த மருத்துவ வசதி ஐம்பது வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. அது போலவே கருப்பையின் கழுத்துப் பகுதியில் வரும் (Carcinoma of the uterine cervix) புற்றுநோயை அடிக்கடி சேவிகல் ஸ்மெயர் (cervical smear) எனப்படும் இலகுவான ஒரு சோதனையால் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்துவிடலாம்.

ஆகவே நம்நாட்டுப் பெண்கள் முற்போக்காக இத்தகைய நாடுகளில் இலவசமாக அளிக்கப்படும் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது மட்டுமன்றி, உடலில் ஏற்படும் கட்டிகள் முதலியவற்றை முற்றும் வரை வைத்திருக்காமல் உடனடியாக மருத்துவரிடம் காட்டி ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத்து இளம் கவிஞர் அறிமுகம்




ஈழமும் கவிதைத்துறையில் தொடர்ச்சியான பாரம்பரியத்தைக் கொண்டது. ஈழத்துப் பூதந்தேவனார் தொடங்கி மகாகவி வழியே வந்த அப்பாரம்பரியப் பாதையில் இன்றைய இளம் கவிஞர்கள் சிலரும் ராஜநடை போடுகின்றனர். அவர்களை உலகரங்கில் இப்பகுதியூடு அறிமுகப்படுத்துகிறோம்.

-ஆசிரியர்-



வாசுதேவன்
ஈழத்தின்
கிழக்கு மாகாண
மட்டக்களப்பைப்
பிறப்பிடமாகக்
கொண்டவர்.
ஓர் பட்டதாரி.
இதுவரை.
"என்னில் விழும் நான்"
"வாழ்ந்து வருதல்"
என்னும் இரு
கவிதை நூல்களை
வெளியிட்டுள்ளார்.
இவர் தம்
கவிதைக் கருக்கள்
ஆழமானவை.

இக்கவிதையில்.
நம் விருப்பம் மீறிய
நாளாந்த
வாழ்க்கைச் சுழற்சியில்
தொலைந்து போகும்
" தன்னை"
தவிப்புடன்
வெளிப்படுத்துகிறார்.
இத்தகைய
அபூர்வமான
அற்புதமான
அக உணர்வுகளைக்
கவிதைக்குள்
அடக்குவது
இவருக்கு
கைவந்த கலை.

## நாளாந்தம்

விருப்பத்துக்கு மாறாக
"ஷேட்டை" வெளியில் விடவும் தயங்கி
உள்ளே விட்டு உடுத்திக் கொள்கிறேன்......
காலையில் என் சைக்கிள் சவாரி.......
உணர்வில் தோயாத காலை வணக்கங்கள்......
யாரோ சிலருக்காக
விரிவுரை வகுப்பில் இருக்கிறேன்......
பாடக்குறிப்பை மனனம்செய்த களைப்பில்
நுரை கக்கும் மனசு......
பன்னிரெண்டு மணிக்கு பசிவந்து போனபின்
இரண்டு மணிக்கு சாப்பிட வாய்த்தது......
படிகளில் ஏறி இறங்கினேன்......
இங்கு புறப்பட்டு
அங்கு போய்ச் சேர்ந்தேன்........
விடுதியின் மொட்டை மாடியில் அமர்ந்து
சூரியனை ரசிக்க எண்ணியிருந்த மாலையில்
ஒரு தெரு முனையில்
பொறுமையற்று சிலருக்கு காத்திருக்க நேர்ந்தது.

என் வாசலை மொய்த்திருக்கும்
இத்தனை தலைகளுக்கும் பின்னால்
என்னிடம் வர முடியாமல்
நுனிக் காலில் எட்டி எட்டி
எனக்குக் கையசைக்கும்-

நான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





த. ஜெயசீலன்


த. சிவசங்கர்

## "பகற்கனவு?"

த. ஜெயசீலன்
யாழ்ப்பாணம்
நல்லூரைப்
பிறப்பிடமாகக்
கொண்டவர்.
விஞ்ஞானப்
பட்டதாரி மாணவர்.
மரபுக் கவிதை
ஆக்கத்தில்
மிகுந்த
ஆட்சியுள்ளவர்.
நாளாந்த நிகழ்வுகளை
தன் கவிதைக்குள்
படம் பிடித்துக்
காட்டும் திறம்மிக்கவர்.
இன்றைய யாழ்
வாழ்வின்
நிதர்சனத்தை
இக்கவிதைக்குள்
கொணர்கிறார்.
பல கவியரங்கு
கண்டவர்.
கவிதையையே
வாழ்வாய்
கருதுபவர்.
வெண்பாவை
வடிவம்
மாற்றியுள்ளார்.

கள்ளுக் கடைச்சுப்பன் கைவார்க்க
சுற்றி நின்று
பல்லிளித்து; உண்ணும் படித்தவர்போல்
வெள்ளை நிலா
நட்சத்திரங் களுக்கு
நல்லவொளி பாய்ச்சஅவை
பொச்சடித்து மின்னும் பொழுது!

❑
"பூவின் நறுமணத்தைப்
போக்கிலியாய்க் கொள்ளையிட்டு
ஓடிப்போய்த் தென்றல் ஒளித்ததுவே
யாது செய்வேன்?"
என்றுவேர் விட்ட இளந்தளிர்கள்
கற்பிழந்த
மங்கையர்போல் ஏங்கும் மருண்டு.

❑
கும்பா பிஷேகத்தில்
கூடிக் குவிந்துருகும்
நம்பக்தர் போல நரம்பிளகி
கம்பனென
பாட்டியற்றி உண்டு
புறந்தெங்கும் எண்ணம்போல்
ஆட்சிசெய்ய எண்ணும் "அகம்".

❑
என்றாலும்......
எண்ணம்போல்
இங்கெதையும் செய்வதற்கு
"இன்றைநிலை" எப்போ இரங்கியது?
இன்றும் என்
வாய்கனிந்தோர் கானம்
வரும் கணத்தில்... குண்டெங்கோ
வாய்திறந்த தென்னை மறித்து!

❑
நாயூளை;
வீழும் நரர் ஓலம்; ஓர்கிழடின்
வாய் புலம்பல்;
வேட்டின் மழைமுழக்கம்;
யாவுளும் நான்
நித்திரைக்கும் நிம்மதிக்கும்
தான் இப்போ "நேர்கின்றேன்"

## இலங்கை இன்றும் அன்றும்

த.சிவசங்கர்
யாழ்ப்பாணம்
வண்ணார்
பண்ணையை
பிறப்பிடமாகக்
கொண்டவர்.
விஞ்ஞானப்
பட்டதாரி.
பல கவியரங்கு
கண்டவர்.
மரபோசை
மாறாதிருக்கும்
புதுக்கவிதை இவர்
கைவந்த கலை.
அண்மையில்
பாண்டிச்சேரி
கம்பன் விழாவில்
கவிஞர் வாலி
தலைமையில்
நடைபெற்ற
'இலங்கை இன்றும்
அன்றும்' என்னும்
தலைப்பிலான
கவியரங்கத்தில்
கலந்துகொண்டு
இவர் பாடிய
கவிதை இது.
கம்பீரம் இவர்
கவிதையில்
மட்டுமல்ல
இவரிலும்

வெல்லுந் தமிழே
விரிசுடரே - என் கவிதைச்
சொல்லும் பொருளும் சுவையும்
புதிதாக்கி - இக்
கள்ளிச் செடியில்
கமலம் பூப்பதற்குக்
கடைக்கண் காட்டு

அரங்கத் தலைவ!
அமிழ் தூறும் கவித்தேனை
ஸ்வரங்கள் எனத் தருகிற
வள்ளலே!
வற்றாக் கவிப் புனலே!

மரபுப் பாம்பணையிருந்த
மாதவனாம் கம்பகவி
புதுக் கவியில் அவதார
புருஷ னெனப்
புரந்தவன் நீ.

உன் காதை
கற்பகதரு நீழலிலே
கலைமகளுக்குக்
கட்டிய
கோயில்.

காமதேனுவின் பாலால்
கவிதைக்கு நடந்த
கனகாபிஷேகம்.

குமரித் தமிழுக்கு - நீ
கோர்த்துக்
கொடுத்த
குறிஞ்சி மலர்மாலை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருநூற்றி நாற்பத்தெட்டு
எழுத்துக் கூட்டி
இலக்கியத்தில் நீ அமைத்த
தாஜ் மஹாலின்
கலாரூபம்
கவித்துவம் நான்
கருத்துட் கொண்டேன்
கண்ணயர்ந்தேன்
கருத்திழந்தேன்
கல்லாய்ப் போனேன்
உலாப் போகும்
ஓங்கு புகழ் ராமன் தன்னை
ஒரு கால் நான்
உணர் வெய்த
உதவச் சொல்லு.

இலங்கை என்றதும் - என்
இதயத்தெழுந்த இன்ப ஊற்று
வாலி என்றதும்
வற்றிப் போனது.

வளர்தமிழே - உன்
வால் செல்லாத
இடத்தில் தானே ஐயா
இலங்கையனின்
கோல் செல்லும் . . .?

இலங்கை என்றதும் - என்
இதயத் தெழுந்த
இன்ப ஊற்று
வாலி என்றதும்
வற்றிப் போனது.

பாப் பகீரதியே !
பாதிப் பலம்
பெறுவதுதானே - உன்
பழக்கம்.
முழுவதையும் எடுத்து என்னை
மூங்கையன் ஆக்கியது ஏன்?

வெறுங்கையோடிலங்கை சென்ற
வேந்தனின் நிலையில் நான்
என்ன வினை செய்தேனோ?
இல்லை
எம் நாட்டின் விதிதானோ?

தேவே !
தெள்ளு தமிழ்ப் பாவில் - உன்
திறனைப் பாடுதற்கு என்
பிள்ளைத் தமிழுக்குப்
பெற்றியில்லை.
உந்தன் தமிழாலேயே
உன்னைப் போற்றுகிறேன்.

கவிக் கமலமே - நீ
காவியத்தில் கொட்டியது
கவிதைத் தேனா - அந்தக்
கள்ளை நான் மொண்டு மொண்டு
கவி தைத்தேனா ?

எண்ணம் மேலோட - அதனால்
எழுந்த கரு உங்கள்
அண்ணம் மேலோட
அரிதாய்க் கவி மணிகள் - இம்
மண்ணின் மேலோட
மகிழ்விக்கும் கவியோரே - விழி
விண்ணின் மேலோட - உமை
வியந்து வணங்குகிறேன்.

பிள்ளைக் கைபிடித்து
பெரியோரே வாருங்கள்
என்னதான் இருக்கிறது
இலங்கைக்குள்....?
எட்டிப் பார்ப்போம்

இலங்கை.

அன்று,
அமரர் உலகிற்கே
அழகுக் குறிப்புத் தந்த
அணி நகர்.

ஆம்
மாசுகள் நீக்கி
மயன் பதித்திட்ட
இந்திர லோகத்தின்
இரண்டாம் பதிப்பு.

குபேர புரியைக்
குப்பைக் கூடையாய் வைத்திருந்த
குவலயம்.

ஆகாய கங்கையால்
அலகிட்டு மெழுகிட்டு
அரம்பையரே
அழகு செய்த
அவனி.

காற்றும் கதிரும்
கை கட்டிச் சேவை செய்ய
காலனுக்கே
காலம் செய்த
கடிநகர்.

கவலை (ப்)
படுவாரில்லாமல் - தான்
பட்டுக் கொண்டிருந்த
பார்.

வீரத்தின்
விளை நிலம்
விஞ்சு புகழ் மானம்
தன் உதிர
ஈரத்தால் காத்து நின்ற
ஈழம்.

கற்பெனும்
களிநடம்
அரங்கேறிய
அம்பலம்.

தவம் செய்த
தவமே
தவக்கோலம் கொண்ட
தரணி.

இன்றும் கூட
வீரத்தின்
விளைநிலம் தான்
விஞ்சு புகழ் மான்
தன் உதிர
ஈரத்தால் காத்து நிற்கும்
ஈழ மண்தான்.

இங்கே
புறநா நூறு மீண்டும்
புதுப்பிக்கப்படுகிறது.

ஓலையில் இருந்தது
Offset ல் வருகிறது.

ஆனாலும்
வங்கத்தில் நிகழ்கின்ற
வானிலை மாற்றங்களால்
பங்கப்படுவது - நம்
பாரே.

கறங்கு கால் புகா
கதிர் புகாப் பூமி
இறங்கு துறையாகி
எடுப்பார் கைப்பிள்ளையென

எங்கள்
குறிஞ்சிகள் மெல்ல மெல்லக்
கோலம் மாறி
நெருஞ்சிப் போர்வைக்குள்
நிழல் தேடுகின்றன.

பாலகனாய் நான் வாழ்ந்த
பாரதனை எண்ணுகிறேன்.

பெட்டை அணிலொன்று - தென்னம்
பிள்ளைக்குள் தான் பாய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'விட்டேனா உனை' யென்று
வேம்பிருந்து ஆண் பாய
வட்டுக்குள்ளிருந்து
வண்டொன்று வெளிவந்து
மொட்டுக்குட் சென்று
மோகக் கிறக்கத்தில்
சொட்டுத் தேன் தேடி
கட்டுக் குலையாத
கன்னிப் பூ என நொந்து
பட்டுத் தேனியொன்று
பருகும் பூக் கண்டு
சுட்டிப்பாய்ப் பறந்து செல
சூழ்தேனி கூடு செல
வெட்டும் ஓர் பார்வையினை
வீசி நின்ற பேடையினை
கிட்டப் போய் மைனாவும்
கீழ்க்கண்ணால் நோட்டமிட
எட்ட நின்று ஓர் பறவை
ஏக்கமுடன் இதைப் பார்த்து - மரம்
தட்டி ஒலி எழுப்ப
தலையாட்டும் இலையூடு
விட்டு விட்டு வரும் ஒளியும்
விண்மீன் என ஜொலிக்க
முட்டைக்காய் மேல் வந்த
மூடப் பாம்பு கண்டு
விட்டேன் மணியை என
விரைந்தே புற்று செல
கட்டைக் குரலெடுத்துக்
காகம் இசை பாட
வெட்டவெளியூடு - ஓணான்
விம்மி யெழுந்தோட
கொட்டுக்குள்ளிருந்து கிளி
கொஞ்சும் மொழிபேச
சட்டிக்குள் உள்ளதனை
சாய்ந்தே புறா கௌவ - இதை
எட்டிப் பாராமல்
என்னவென்று கேளாமல்-புற்
கட்டுத் தலைக்கிடுக்கி
கண்ணயர்ந்த தாத்தா முன்
கட்டிப் புரண்டு - நாம்
கால் பதித்து விளையாடி
சட்டைகளில் புழுதியுடன்
சறுக்கி நிதம் நீராடி
ஒட்டிக் கிடந்து - எம்
உயிராகி நின்ற நிலம் - இன்று
புல் முளைக்க நாதியின்றி
புழுதி பறக்கிறது.

கவிதை பாட எனக்
கம்பன் அரங்கேறி
கவலை பாடுகிறேன்.

சோகம் சொல்லி இலக்கியச்
சுவை நுகரும் உங்களது
தாகம் தணியும் என்று
தப்பாக எண்ணவில்லை.

ஆனாலும் - துப்பாக்கி
ரவைகளின் ஓசையிடை
ரத்த வெறிப் பாஷையிடை
கொவ்வை இதழ் குமுத முகம்
குதலை மொழி பேசும்
தெவ்வர் அமுது எனப்பாடும்
திறமை எனக்கில்லை.

உண்ணீர் காணாத
உதடுகளினின்றும்
பன்னீரில் குளிப்பது போல்
பாடல் பிறக்காது.

பூமியிலே வேதனையில்
புழுங்கும் என் இனத்திற்கு - கவிதைச்
சாமரமாய் வீசாமல் - நான்
சாற்றுவதில் என்ன பயன்?
பாவிகமே இல்லாத
பாட்டு - எனக்கெதற்கு?

பொய்கையென எம்மண்ணில்
பூத்திருந்த தமிழ் வாழ்வை
வைகையென எங்களுக்கு
வளம் செய்த திருநிலத்தை
செய்ய திருத் தாமரையாள்
சிந்து விளையாடி நின்ற
கை தவத்தை இழந்து விட்டு
கண்ணீரில் எம் வாழ்வு.

பொங்கிவரும் பூம் புனலின்
பொய்கை தமிழ் வாழ்வு - அதை
எங்கிருந்தோ வந்த வெள்ளம்
எடுத்துப் போயிற்று.

வெள்ளத்தின் ஓட்டத்தில்
வீழ்ந்த மரம் எத்தனையோ?
விழுதுகளைத் தொலைத்து நிற்கும்
விருட்சங்கள் எத்தனையோ?
வேரோடு மண் போன
விளைநிலங்கள் எத்தனையோ?
வெட்ட வெளியாய்ப் போன
விரிதோப்பு எத்தனையோ?

காய் பிஞ்சு கனியெல்லாம்
காணாமற் போயிற்றே.
கடுங் காற்றில் சிறு பூவும்
கழுத்தோடு போயிற்றே.
மொட்டுக்கள் பல இங்கு
முகிழாமற் போயிற்றே.
முள் முருங்கைக் கதியாலும்
முளைக்காமற் போயிற்றே.

வாழையடி வாழையெல்லாம்
வாடியதை என்னென்பேன்.
பாளைகளைத் தொலைத்து நிற்கும்
பனை தென்னை என்னென்பேன்.
ஓலையின்றி அழுகின்ற
ஒற்றை மரம் என்னென்பேன்
சோலைகளில் சுந்தரத்தின்
சுவடில்லை என்னென்பேன்.

விரியத் தலையெடுத்து
விரும்பி நின்ற பூக்களினை
புலர்வதற்குச் சற்றேமுன்
பூப்பறித்து விட்டார்கள்.

எங்கள்
மொட்டுக்களைத் திறந்தும் - தம்
மோகத்தைத் தீர்க்கையிலே - கை
வெட்டரிவாள் ஆகாமல்
வெறுமே இருக்கிறது.

நிலவைத் தேடி
பரதேசம் போனது போல்
நிம்மதியைத் தேடி - இந்த
நித்திலத்தில் அலைகின்றோம்.

உப்புக் கடலோரம்
உலவும் சிறு காற்றும் - எங்கள்
கண்ணீரில் காய்ந்தே
கரிப்புப் பெறுகிறது.

கத்தும் கடல் இங்கே
கரைகளிடம் கேட்டு வந்து
நித்தம் ஓதுவது - எம்
நீண்ட பெரு மூச்சு.

சோக வனத்தில் - இன்றும்
சுடர்க் கொடியாய் - நின்றபடி
இராகவனைத் தேடுகிறோம்.

பாம்பன் அணைதாண்டி-அப்
பரந்தாமன் வருவானோ-இல்லை
தூரம்பவள வண்ணன் அது
தூரமென நினைப்பானோ
யாரறிவார்?

எங்களுக்கு
நேரம் சரியில்லை
நிறுத்துகிறேன்
இத்தோடு.

www.tamilarangam.net

# 1999 ல் உலகக் கோப்பை கிரிக்கெட்
# உலக கிரிக்கெட் கவுன்சில் ஏற்பாடு





அடுத்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணை முழு விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் 4 ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடத்தப்படுவது தெரிந்ததே! கடைசியாக கடந்த ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய 3 நாடுகளும் இணைந்து நடத்தின.

அடுத்து இந்தப் போட்டியை சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலே நடத்த முடிவு செய்துள்ளது. அதன்படி அடுத்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி 1999ம் ஆண்டு மே, ஜுன் மாதங்களில் இங்கிலாந்தில் நடைபெறும்.



## உலகக் கோப்பை கிரிக்கெட்

### 12 அணிகள்

போட்டி நடைபெற இன்னும் 2 ஆண்டுகளே உள்ளதால் ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. இந்தப் போட்டியை சுமார் 5 லட்சம் பேர் நேரில் கண்டுகளிப்பார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து சுமார் 5 ஆயிரம் பேர் இங்கிலாந்து செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களுக்காக டிக்கெட் விற்பனை அடுத்த ஆண்டே தொடங்கிவிடும்.

1999 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் மொத்தம் 12 அணிகள் கலந்து கொள்ளும். அந்த அணிகள் விவரம் பின்வருமாறு:

இங்கிலாந்து, இலங்கை, இந்தியா, தென்னாபிரிக்கா, ஜிம்பாப்வே, கென்யா, ஆஸ்திரேலியா, ஸ்கொட்லாந்து, வெஸ்ட் இண்டீஸ், பாகிஸ்தான், நியூசிலாந்து, பங்களாதேஷ்.



இந்தப் 12 அணிகளும் 2 பிரிவாகப் பிரிக்கப்படும். மே 14-ந் திகதி தொடங்கி 31-ந் திகதி வரை 12 அணிகளுக்கும் இடையே முதல் சுற்றுப் போட்டிகள் நடக்கும். இதில் முன்னணி பெறும் 6 அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெறும். அதன் பிறகு அரை இறுதி ஆட்டங்கள் நடத்தப்பட்டு ஜுன் 20-ந் திகதி இறுதிப்போட்டி நடைபெறும். இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டமே இத்தொடரில் முதலாவது ஆட்டமாகும். இந்த ஆண்டு இரண்டு அணிகள் புதிதாக இறுதிச் சுற்றில் பங்கு பற்றத் தகுதி பெற்றுள்ளன. அவை பங்களாதேஷ் மற்றும் ஸ்கொட்லாந்து அணிகள் ஆகும்.

ஸ்கொட்லாந்து ஆஸ்திரேலியாவையும், பங்களாதேஷ் நியூசிலாந்தையும் தமது முதல் போட்டிகளில் சந்திக்கின்றன. இந்தியா தன் முதல் ஆட்டத்தில் தென்னாபிரிக்காவுடன் மோதுகிறது.

நன்றி- தினபூமி





www.tamilarangam.net

# காசிக்குப் போவோமா?



மாயூரம் பாஸ்கரன்
சுப்ரமணியம்.

தீபாவளியன்று தமிழகத்தில் "கங்காஸ்நானம் ஆச்சா?" என்று கேட்பது வழக்கம். தீபாவளியன்று வரும் அமாவாசையில் கங்கையில் நீராடினால் மிக்க விசேஷம் என்பது மரபு. கிறிஸ்தவர்களுக்கு ஒரு ஜெருசலம், முகமதியருக்கு ஒரு மெக்கா, இந்துக்களுக்கு ஒரு காசி. இந்துக்களாகப் பிறந்தவர்கள் வாழ்க்கையில் ஒருமுறையாவது காசிக்குச் செல்ல வேண்டும் என்று சொல்வதுண்டு. திருவாருர் – பிறக்க முத்தி, திருவண்ணாமலை – நினைக்க முத்தி, சிதம்பரம் – தரிசிக்க முத்தி, காசி – இறக்க முத்தி என்று புராணங்கள் சொல்கின்றன.

இந்தியாவின் புராதன நகரங்களில் ஒன்றான காசி, ஜீவநதியான கங்கைக் கரையில் அமைந்துள்ளது. நதிகளான வருணாவும், அசியும் சங்கமிப்பதால் வாரணாசி என்ற பெயரும் உண்டு. கங்கைக் கரையில் 64 கட்டங்கள் அதாவது துறைகள் **(GHATS)** இருக்கின்றன. இந்தத் துறைகளுக்குப் பின்னால் அழகிய கோயில்களும், மசூதிகளும், யாத்ரீகர் விடுதிகளும், பெரிய மாளிகைகளும் உள்ளன. இவைகள் அக்காலத்தில் இந்தியாவின் அரசர்களும், செல்வந்தர்களும், நேப்பாள ராஜாக்களும் கட்டியவைகளாகும். கங்கைக் கரையின் ஓரத்தில் அமைந்துள்ள கட்டிடங்களில் பண்டாக்கள் எனப்படும் பூஜாரிகள், பெரிய, பெரிய ஓலைக் குடைகளின் நிழல்களில் அமர்ந்து, சங்கற்பம், மற்றும் பித்ரு காரியங்கள் செய்வது வழக்கம். தினமும் அதிகாலையில் திரளான மக்கள் கங்கையில் புனித நீராடுகின்றனர். உள்ளூர் மக்கள் "சியாராம்", "ஜெய்சியாராம்" என்று சொல்லி நீராடி கங்கையன்னைக்கும், சூரிய பகவானுக்கும் பூஜைகள் செய்கிறார்கள். கங்கையில் நீராடினால், செய்த பாவங்கள் அகன்று புண்ணியம் சேரும் என்பது இந்துக்களின் ஆழ்ந்த நம்பிக்கை. புனித நதியான கங்கை சிவபெருமானின் சிரசில் உற்பத்தியாவதாக புராணங்கள் கூறுகின்றன. இதையே வட இந்தியர்கள் மகாதேவின் நதி என்கிறார்கள்.

இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் படகில் பயணம் செய்து 64 கட்டங்களையும் பார்ப்பது வழக்கம். கங்கையின் 64 கட்டங்களுக்கும் பெயர்கள் உண்டு. இவற்றில் தசாஸ்வமேத் கட்டம், அரிச்சந்திரா கட்டம், மணிகர்ணிகா கட்டம், கேதார் கட்டம், அனுமான் கட்டம், பஞ்சகங்கா கட்டம் போன்றவை குறிப்பிடத்தக்கன. 64 கட்டங்களில், தசாஸ்வமேத் என்ற கட்டத்தில் இருந்து மற்ற கட்டங்களை அழகாகக் காணலாம். அரிச்சந்திரா கட்டத்திலும், மணிகர்ணிகா கட்டத்திலும், இறந்தவர்கள் உடலை எரித்து கங்கையில் தள்ளுவார்கள். இது காண்பதற்கு மிகவும் வருத்தமான காட்சிதான். ஆனால் இங்குள்ளவர்கள் அதுதான் இறந்தவர்களுக்கு புண்ணியம் என்கிறார்கள். இந்த அரிச்சந்திரா கட்டத்தில்தான் ஒரே ஒரு பொய் கூறாமைக்காக தன் நாடு, மனைவி, மக்களை இழந்து அரிச்சந்திரன் ஊழியம் செய்ததாக அரிச்சந்திர புராணம் என்னும் நூல் கூறுகிறது. இங்கு அரிச்சந்திரனுக்கு ஒரு கோயிலும் உண்டு. தசாஸ்வமேத் கட்டத்தில் தான் பிரசித்தி பெற்ற விஸ்வநாதர் கோயில் உள்ளது. ஆலயத்தின் கூரை பொன்னால் வேயப்பட்டது. விஸ்வநாதருக்கு எந்நேரமும் கங்காபிஷேகம் நடந்த வண்ணம் இருக்கும். கோயிலின் உள்ளே அநேக சிவலிங்கங்கள் உண்டு. கோயிலின் அருகேயே அவுரங்கசீப் மசூதியும் உண்டு. அன்னபூரணி கோயிலும் விஸ்வநாதர் ஆலயத்துக்கு அருகேயே உள்ளது. விஸ்வநாதருக்கு நடைபெறும் பூஜைகளில் சப்தரிஷி பூஜை மிகவும் சிறப்பானது.

காசியில் தீபாவளிப் பண்டிகை மிக விமரிசையாக 3 நாட்கள் கொண்டாடப்படுகிறது. இதற்காக இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருவார்கள். விஸ்வநாதர் கோயிலின் உள்ளே லட்டுக்களால் ஆன தேரும், அன்னபூரணி கோயிலில் தங்கத்தினாலான அன்னபூரணியும் தீபாவளியன்று மட்டுமே காணமுடிகின்ற அற்புதமான தரிசனங்களாகும். லட்டுத்தேருடன், பல்வேறு இனிப்பு வகைகளும் கூடைகூடையாக வைக்கப்பட்டிருக்கும். நெய் மணமும், இனிப்புகளின் வாசமும் நம்மை அருகேயே இருக்குமாறு செய்யும்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமுகத்தின் மேற்பார்வையில் உள்ள காசிவிசாலாட்சி கோயில் தென்னிந்திய பாணியில் உள்ளது. மற்றும் 'துர்க்கா குண்ட்' என்ற இடத்தில் துர்க்காகோயிலும், அருகே உள்ள 'துளசி மானஸ் மந்திரும்' காணத்தகுந்தவை. துளசி மானஸ் மந்திரில் இராமாயண காப்பியத்தைச் சுவரில் தீட்டியுள்ளார்கள். நகரை விட்டுத் தள்ளியிருக்கும் கௌடி மாதா கோயிலும், கால பைரவர் கோயிலும் சென்று தரிசித்தால்தான் காசி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாத்திரை பூரணமடைவதாகும். எனவே இவ்விரு கோயில்களும் முக்கியமாகத் தரிசிக்க வேண்டியவைகளாம்.

காசி இந்துப் பல்கலைக்கழகம் மிகப்பெரிய பல்கலைக்கழகம். இதனுள் பிர்லா அறக்கட்டளையால் 'பிர்லா மந்திர்' பளிங்குக்கற்களால் பிரம்மாண்டமாக கட்டப்பட்டு மிகச் செம்மையாகப் பராமரிக்கப்படுகிறது. கங்கையின் அக்கரையில் ராம் நகர் என்ற இடத்தில் காசியை ஆண்ட ராஜாக்களின் அரண்மனை உள்ளது. இங்கு பல அரிய பொக்கிஷங்கள் உள்ளன.

காசி, இந்துக்களுக்கு மட்டுமல்லாமல், புத்த மதத்தினருக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. இங்குதான் புத்தபிரான் தனது பௌத்தமதக் கொள்கைகளை முதன் முதலில் போதித்தார். தர்மேக்ஸ் தூபியும், புத்தர்கோயிலும், அசோக சக்கரமும், மூலகந்தகுடி விகாராவும் சாரநாத்தில் முக்கியமானவைகளாகும்.

வாரணாசிக்கு பனாரஸ் என்ற பெயரும் உண்டு. பனாரஸ் பட்டுப்புடவைகள் பெயர் பெற்றவை. ஜரிகை வேலைப்பாடுகள் அதிகம் இருக்கும். மொராதாபாத் பித்தளைப் பொருட்களும், செம்பு பாத்திரங்களும் இங்கு நிறையக் கிடைக்கின்றன. பான் என்று சொல்லப்படும் வெற்றிலைப் பாக்கிற்கும் பனாரஸ் பெயர் பெற்றது. வாரணாசி அருகே உள்ள பதோஹி என்ற இடத்தில் புகழ்பெற்ற தரைவிரிப்பு என்ற ரத்தினக் கம்பளங்கள் தயாராகின்றன. விலைமதிப்புக் கொண்ட இவைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. சிதார், தபேலா போன்ற இசைக்கருவிகளும் வாரணாசியில் தயாரிக்கப்படுகிறது.

காசியில் தங்குவதற்கு பலவிடுதிகள் உள்ளன. கேதார் கட்டத்தில் உள்ள திருப்பனந்தாள் ஆதீனத்தின் விடுதியும், கோதௌலியா என்ற இடத்தில் உள்ள நகரத்தார் விடுதியும் தமிழக சுற்றுலாப் பயணிகளுக்கு அவை சேவை செய்கின்றன. மார்வாரி விடுதியான ஜெய்புரியா மேன்ஷனில் சுவையான சாப்பாடும் கிடைக்கும். இது தவிர பல நவீன ஹோட்டல்கள் நிறைய உண்டு. வாரணாசி நகரைச் சுற்றிப் பார்க்க நிறைய ஆட்டோ ரிக்ஷாக்கள், சைக்கிள் ரிக்ஷாக்கள், டோங்கா எனச் சொல்லப்படும் குதிரை வண்டிகள் உள்ளன. வாரணாசி செல்ல டெல்லி, பாம்பே, கல்கத்தா, சென்னை போன்ற மாநகரங்களில் இருந்து ட்ரெயின் வசதியும், விமான வசதியும் உண்டு. காசி சென்று வந்த பின் இராமேஸ்வரமும் சென்று தரிசிக்க வேண்டும் என்பது தமிழ் மரபு.

## நிகழ்வுகள்

-வேல்முருகன்-

மழைநாள் மாலையொன்றில்
பாண்டியனில் சன்னலோரப் பயணம்.
பின்னோக்கிப் பயணிக்கும் மரங்கள்.
புள்ளியாய்ப் பறக்கின்ற புட்கள்.
எண்ணம் ஓடும் எங்கெங்கோ.
வாழ்வு நூற்கண்டின் முனை தேட முனையும்.
எங்கே போகுதென்று தெரியாத
எங்கேயோ போய்க் கொண்டிருக்கும்
ஒற்றையடிப்பாதை.
பேருந்துக் குலுக்கலில் கலைந்த சிந்தனை.
ஏதோ விபத்தாம் - "கண்ணு மண்ணு தெரியாம
ஒட்டறானுங்கய்யா."
'உச்சு'கள், கசிவுகள், மௌனங்கள்.
அரக்க லாரி சிதைந்து கிடக்க
ஓரத்தில் உறைந்த இரத்தம்.
"எல்லாரும் ஏறியாச்சா?"
வாழ்வு போகிறது அதன் போக்கில் -
பாண்டியனைப் போலவே.

*(95-ல் ஒரு மதுரைப் பயணத்தின் போது)*

நன்றி. தமிழ் இணையம்

## தமிழ் மொழி

-ஜானகி பாஸ்கரன்-

தந்தையின் உதிரத்தில் கலந்த மொழி
அன்னையின் வயிற்றினில் தரித்த மொழி
பாசத்தைப் பகிர்ந்திடச் செய்த மொழி
பாடியும் ஆடியும் மகிழ்ந்த மொழி!

இராகங்கள் பற் பல கண்ட மொழி
இசையுடன் ஒன்றாய் இணைந்த மொழி
உயிரும் மெய்யும் கொண்ட மொழி
உவமையும் உருவும் அணிந்த மொழி!

வள்ளுவன் குறள்தனைத் தந்த மொழி
பாரதி கவிதை புனைந்த மொழி
கம்பன் காவியம் படைத்த மொழி
கருத்துடன் கலைதனை வளர்த்த மொழி!

சங்கங்கள் பல சமைத்த மொழி
சபைதனில் தேனாய் ஒலித்த மொழி
விந்தைகள் விதமாய்ப் புரிந்த மொழி
இயற்கையின் வனப்பை வடித்த மொழி!

அடிமையில் வாழ்ந்திட மறுத்த மொழி
உரிமையைக் கேட்டிடத் துணிந்த மொழி
மூத்தோர் முறையாய் வளர்த்த மொழி -
தனக்கென ஒரு நாடற்ற மொழி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மின்னஞ்சலின் பயணம்!
## (Travel of E-mail)



எழுதியவர்:
நாக. இளங்கோவன், சென்னை

உலகின் ஏதோ ஒரு மூலையில் தன் கணினியை மின்வலையில் (பல்கணினி இணைப்பு - Internet) இணைத்திருக்கும், ஒரு நபரை மிகச்சிறிய முகவரியைக் கொண்டு, அதிவிரைவில் செய்தித் தொடர்பு கொள்ளும், அதிநவீன மின்னஞ்சல் (E-Mail -Electronic mail) எவ்வாறு பயணிக்கின்றதென்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.



நம் சொந்தக் கணினியிலிருந்து ஒற்றையடிப் பாதை (தொலைபேசித் தொடர்பு) வழியாக, 'மின்வலைச் சேவைதாரரின்' (Internet Service Provider) பெரிய கணினியையடைந்து, பின்னர் பல உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சேவைதாரர்களை, இணைக்கும் மின்வலையின் பிரதான பகுதி (Internet Backbone) வழியேதான் அனைத்துச் செய்திகளும் பரிமாறப்படுகின்றன.



பல அலுவலகங்கள், இன்றைக்கு சொந்தமாக 'மின்னஞ்சல் பரிமாறியை' (E-Mail Server) வைத்திருக்கின்றன. அங்கு முதலில் ஒருவரின் கணினியிலிருந்து, செய்திகள் மின்னஞ்சல் பரிமாறியை அடைந்து, பின்னர் ஒரு தனிப்பாதை வழியே சேவைதாரரை அடைகிறது. பிறகு அது 'மின்வலையின் பிரதான பகுதி' (Internet Backbone) வழியே பயணிக்கிறது.



### மின்னஞ்சல் முகவரி (Email-Id or Email - Address)

"பெறுநரின் பெயர்" <அடையாளப் பெயர் @ கணினியின் பெயர். "Name" <id@domain name>. இந்த மூன்று பாகங்களைக் கொண்டதுதான் மின்னஞ்சல் முகவரி. உதாரணம் "N.Elangovan" <elangov @pacific. net. sg>;

இதில் பெறுநரின் பெயர், அவசியமான ஒன்றல்ல. ஆனால் மற்ற இரண்டும் அவசியமானவை. பெறுநரின் அடையாளப் பெயர், சேவைதாரர் அல்லது சொந்தக் கணினிக்கு மட்டுமே தெரியும்.

ஆனால் பெறுநரின் கணினியின் பெயர், மின்வலையில் (Internet) உள்ள கணினிகள் முழுமைக்கும் தெரியும் அல்லது தடங்கள் அவ்வாறு அமைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு கணினிகளின் பெயர்களைப் பதித்து வைத்திருக்கும் கணினிக்குப் 'பெயர் பரிமாறி' (Domain Name Server) என்று பெயர். பன்னாட்டுப் பெயர் பரிமாறிக் கணினிகள் இணைக்கப்பட்டு சேவைகள் துரிதப்படுத்தப்படுகின்றன.

ஆகையால், மின்வலையில் (Internet) உள்ள கணினியொன்றிலிருந்து அனுப்பப்பட்ட செய்தி, பெயர் பரிமாறியில் பெறுநரின் கணினிப் பெயர் இருக்கிறதா என்று சரிபார்த்துக் கொண்டு (DNS look up), பெறுநரின் கணினிக்கான 'மின்வலை விதிப்படியான விலாசம்' (IP Address), மற்றும் மாற்றுத் தட முகவரிகள் (இருந்தால்) எடுத்துக் கொண்டு, பெறுநரின் கணினியைச் சென்றடைந்து, பின்னர் உரியவரின் அஞ்சற் கோவையை (Mail Box) அடைகிறது. இவ்வாறு அக் கணினிக்குள் பலருக்கு அஞ்சற் கோவையிருக்கும். உரியவர் தேவைப்படும்போது, அஞ்சற் கோவைக்குத் தன் கணினியை இணைத்து செய்திகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

(அடுத்த இதழில் தொடரும்......)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழ் வளர்த்த சான்றோர்........



# பரிதிமாற்கலைஞர்

-சாவை. தம்பையா யோகநாதன்-

நம் செந்தமிழ் மொழி நினைத்தற்கும் எட்டாத காலத்திற்கு முன்பு தோன்றியது. இதன் பழமையை அறுதியிட்டுக் கூற முடியாதெனக் கண்ட பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள், தாம் எழுதிய மனோன்மணீயம் என்னும் நாடகநூலில் தமிழ்த்தாய் வாழ்த்துக் கூறுமிடத்து, *“முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமோ?”* என்றார்.

சீரிளமைத் திறத்தோடு திகழும் எங்கள் தெய்வத்தமிழ், உயர்ந்தோர் தொழுது பயிலப்பட்டமொழியாக, தனித்து இயங்கும் ஆற்றல் நிரம்பிய மொழியாக விளங்குதல் காரணமாக உயர்தனிச் செம்மொழியாகப் போற்றப்படுகிறது.

ஒரு மொழியின் வளர்ச்சிக்கு பிற மொழிச் சொற்கள் புகுந்து ஏற்றம் அளிப்பதுண்டு. இந்தவகையில் வடமொழிச் சொற்கள் சில தமிழில் கலந்து உறவாடுவதை நாம் காண்கிறோம். சங்ககாலத்துக் கவிதைகளில் கூட வடமொழிச் சொற்கள் விரவி இருப்பதைப் பார்க்கிறோம்.

புதிய கருத்துக்களும், பொருள்களும் சுட்டுதற் பொருட்டு பிறமொழிச் சொற்களை எடுத்தாளுதல் தவறாகாது. ஆனால், அச்சொற்களைத் தமிழின் இயல்புக்கு ஏற்றவாறு செப்பனிட்டுச் சேர்த்தல் வேண்டும்.

இவ்வுண்மையை உணர்ந்தே, தமிழ்ச்சான்றோர் வடசொல், திசைச்சொல் இவற்றை விலக்காமல் தமிழில் பொருந்துமாறு வழங்கத்தக்க இயல்முறைகளை வகுத்துள்ளனர்.

இடைக் காலத்தில் வடமொழிப் பண்டிதர் சிலரின் ஆதிக்க வெறி, அன்னார் இயற்றிய இலக்கண நூல்களில் காணும் முரண்பாடு, தமிழைப்பற்றி எடுத்தாளும் குறைபாடு என இவற்றைக் கண்ணுற்ற நற்றமிழ்ப் புலவர் சிலர், தனித்தமிழில் பேசவும், எழுதவும் முடியுமெனக் கூறி, அதனைச் செயலில் காட்ட முனைந்தனர்.

*“அன்றியும் தமிழ்நூற் களவிலை அவற்றுள்*
*ஒன்றேயாயினும் தனித்தமிழ் உண்டோ”*

*“அன்றியும் ஐந்தெழுத்தால் ஒருபாடை*
*என்றறையவே நாணுவர் அறிவுடையோரே”*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று கூறி தமிழை நகையாடும் வடமொழிப் பண்டிதரின் கூற்றுக்கு ஆப்பு வைக்கும் வகையில் அவர்கள் தனித்தமிழ் இயக்கத்தை ஆரம்பித்தனர். அவர்களுள் முன்னோடியாக விளங்கியவர் தான் வி. ஜி.சூரியநாராயண சாஸ்திரியார். அவரைப் பின்பற்றி அதனை விரிவுபடுத்தியவர் மறைமலை அடிகள்.

சூரிய நாராயண சாஸ்திரியார் ஒரு கலைமாணி (B.A.) ஆங்கிலம், ஆரியம், தமிழ் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த அறிவுபடைத்தவர். தன் தாய் மொழியாகிய தமிழில் ஆராத காதல் கொண்டவர். வடமொழிச் சொற்களால் அமைந்திருந்த தன்பெயரையே, பரிதிமாற்கலைஞன் என்று தூய தமிழில் மாற்றி இன்பம் கண்டவர். தமிழை இகழ்வார் முன்னிலையில் பயில்வானாக நின்று காட்சி அளிக்கும் பரிதிமாற்கலைஞரை 'பயில்வான் பண்டிதர்' என்றும் அழைத்துப் பெருமை கண்டார் சிலர்.

பரிதிமாற்கலைஞர் ஒருநாள் வட மொழிப்பண்டிதரோடு உரையாடிக் கொண்டிருக்கும் வேளை, இருவருக்கும் இடையே முகமும் வாயும் வந்து மோதுகின்றன. "யாக்கை நலம் பூண்ட தமிழ் மாது வட மொழி நாயகனைக் காணும் மட்டும் முகம் காட்டாது நாணிநின்றாள் என்னே?" என்றார் வட மொழிப்பண்டிதர். முகம் என்ற சொல் வட மொழிச் சொல். அதனை, தமிழ் கடன் வாங்கியதென்பது வடமொழிப்பண்டிதரின் கருத்து. இதனைக் கேட்டதும் ஒருகணம் யோசித்தார் பரிதி மாற்கலைஞர். பின்னர் வடமொழிப் பண்டிதரைப் பார்த்து "நீங்கள் சொன்னதில் தவறு இல்லை. காரணம், வடமொழி நாயகன் ஊமையாய் இருத்தல் கண்டு தமிழ் மகள் முகம் காட்டாது நாணி நின்றாள்" என்றார். வாய் என்ற தமிழ்ச் சொல்லை வடமொழி கடன் வாங்கியதென்பது பரிதிமாற்கலைஞர் கூற்று. அன்று இருவரும் சமத்துவநிலையில் ஒருவரை ஒருவர் ஆரத் தழுவிக் கொண்டனர்.

பரிதிமாற்கலைஞர் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் கலைமாணி (B.A.) வகுப்பில் இருந்த பொழுது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி, அவரது நுண்மாண் நுழைபுலத்தை எண்ணி எண்ணி வியக்கவைக்கின்றது. அக் கல்லூரியின் அதிபராகவும், ஆங்கில பாட ஆசிரியராகவும் விளங்கியவர் மில்லர். இவர் ஒருநாள், ஆங்கிலக் கவிஞர் 'டென்னிஸன்' எழுதிய *'ஆர்தரின் இறுதி'* என்ற கவிதைப்பகுதியில் காணும் ஒரு காட்சியை சுவைபட விளக்கினார்.

நீரில் படகு சென்ற காட்சியை, சிறகு விரித்துக் கொண்டு நீரில் நீந்திச் செல்லும் அன்னப்பறவைக்கு உவமித்து இருப்பதைச் சுட்டிக்காட்டி இத்தகைய உவமைநலம் தமிழ் இலக்கியத்திலும் காண முடியாது என்றார். இவ்வாறு சொன்னதுதான் தாமதம் எழுந்தார் பரிதிமாற்கலைஞர். "கம்பராமாயணத்தில் இந்த உவமை இன்னும் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதே" என்றார். "எங்கே சொல்லும் பார்க்கலாம்" என்றார் மில்லர்.

*"விடுநதி கடிதென்றான் மெய்யுயிரனை யானும்*
*முடுகின நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்*
*கடிதினின் மடவன்னக் கதியது செலாநின்றார்*
*இடருற மறையோடு மெரியுறு மெழுகானார்"*

கங்கை நதியை சீதை, இலக்குவனுடன் இராமர் கடக்கும் காட்சியைக் கூறுவது இப்பாடல். அன்று பரிதிமாற்கலைஞரின் பரந்த அறிவையும், ஆற்றலையும் கண்டு பாராட்டினார் மில்லர். பரிதிமாற்கலைஞர் எளிமையும், அழகும் வாய்ந்த கவிதைகள் இயற்றுவதிலும் வல்லவர். எடுத்துக்காட்டாக அவர் இயற்றிய பாடல்களில் ஒன்று வருமாறு.

*"கையினிற் போந்திருந்த காமருமணியே என்றன்*
*ஐயனே நின்னைநேரில் அடியனேன் என்றுகாண்பேன்*
*துய்யனே என்று காண்பேன் சுந்தரா என்றுகாண்பேன்*
*செய்யனே என்று காண்பேன் செல்வமே என்றுகாண்பேன்"*

பரிதிமாற்கலைஞரின் செந்தமிழ் நடையில் சிலேடை நயம் புகுந்து சிறப்புச் செய்ததுண்டு. தன் நண்பரும், பழந்தமிழ் ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து அவற்றைப் பதிப்பித்தவருமான ஈழத்து தாமோதரம்பிள்ளை அவர்களைப் பற்றி, ஒருமுறை பரிதிமாற்கலைஞர் "இவருக்கு எவர் தாமோதரம்?" என்று சிலேடைவாய்பாட்டில் சிறப்பித்துக் கூறியுள்ளார். தண்டமிழ் ஆசானாக, முத்தமிழ் வித்தகனாக, மூரி பெற வாழ்ந்த பரிதிமாற்கலைஞர், 'நாடக இயல்' என்ற நாடக நூலை எழுதினார். இதற்கு இலக்கியமாக ரூபாவதி, கலாவதி என்ற இரு நாடகங்களை இயற்றினார். வேறு சில நூல்களையும் யாத்து தமிழன்னைக்குப் புகழ் சூட்டினார். தமிழ்த் தாகத்தை நிறைவு செய்ய அவர் நீண்ட காலம் வாழ முடியவில்லை. இளம் வயதில் காலன் கைப்பட்டு விட்டார். எனினும் அன்னார் செய்த தமிழ்ப் பணியை தமிழ் கூறும் நல்லுலகம் நன்றி உணர்ச்சியுடன் வாழ்த்தி வணங்குகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நியூசிலாந்தில் புதிய தமிழ் மருத்துவர்கள்

ரமணீ சீர்மாறன்

> புதிதாக வர விருக்கும் மருத்து வர்களுக்கு இன்னமும் கதவு திறந்தே இருக்கிறது.

இலங்கை மருத்துவப் பட்டத்திற்கு நியூசிலாந்தின் குடிவரவுத் திணைக்களம் கொடுத்தளவு அங்கீகாரமும் கௌரவமும் மருத்துவத் தொழிற்துறைசார் அமைப்பு (Professional body) வழங்கத் தயாராக இல்லை. இலங்கையின் மருத்துவப் பட்டம் குடியேற்றத் தகைமைக்கு மதிப்பெண்களைத் தந்தது உண்மைதான். ஆனாலும் இங்கே வந்திறங்கியதும் குடிவரவுத் திணைக்களம் அங்கீகரித்தது போன்று நியூசிலாந்து மருத்துவக் கழகம் (கவுன்சில்) அங்கீகரிக்க மறுத்து விட்டது.

மருத்துவர்களாகத் தொழில் செய்ய விரும்பின் அனைவரும் அடி மட்டப் பரீட்சை எடுத்தேயாக வேண்டும் என விடாப்பிடியாக நின்று கொண்டது மருத்துவக் கழகம். "இது ஒன்றும் உங்களுக்காகப் புகுத்தப்பட்ட புதிய விதிகள் அன்று. ஏற்கனவே உள்ள விதிகளை சற்றுக் கடுமையாக அமுல்படுத்துகிறோம். இதனால் உங்களுக்கு ஏற்படும் இடைஞ்சல்களுக்காக எங்களை முறைக்கிறீர்கள். இங்கு குடியேறுவதற்கு முன் உங்கள் துறை சார்ந்த தொழில் வாய்ப்புகள் எப்படி? சட்ட விதி முறைகள் என்ன? என்று தெரிந்து வைத்திருக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. ஐயா! நீங்கள் எல்லோரும் படித்தவர்கள் அல்லவா? அப்படியே நடக்க வேண்டாம்?" என்பது போல் அதிகாரிகளின் போக்கு உள்ளது.

அவர்கள் கூறுவதிலும் ஒரு சில நியாயங்கள் இருப்பது உண்மை தான். இலங்கை மருத்துவர்கள் இங்கு குடியேறியதும் நேரடியாக மருத்துவத் தொழில் புரிய முடியாது என்பது ஏலவே எமக்குத் தெரியாத ஒன்றல்ல. ஆனால் முன்பு தெரியாத – இங்கு வந்திறங்கிய பின் தெரிந்துகொண்ட விடயங்களும் உண்டு. அவை மருத்துவப் பரீட்சை பற்றிய கடுமையான நிபந்தனைகளும் கடுங்கோட்பாடுகளும், மருத்துவக் கல்லூரி, மருத்துவக் கழகம் என்பவற்றின் பரீட்சை பற்றிய இருட்டடிப்புகளும், உதவி மறுப்புகளுமே! 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது' போல பரீட்சைக் கட்டணமும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

குடிவரவுக் கொள்கையில் அண்மைக் காலம் வரை காணப்பட்ட புள்ளியிடும் திட்டத்தினால் ஏராளமானோர் இங்கு குடியேறினர். ஏறத்தாழ 600 மருத்துவர்கள் இப்படி வந்தவர்களில் அடங்குவர்.

இவர்களில் மருத்துவப் படிப்பின் அடிப்படைத் தகைமை (MB BS) முதற் கொண்டு MRCP, FRCS, MS, MD போன்ற அதி உயர் நிபுணத்துவப் பட்டங்கள் பெற்றவர்களும், இரண்டு மூன்று வருட தொழில் அனுபவம் உடையவர்களும் அடங்குவர். எனினும், வேலியில் ஒரே ஒரு 'பொட்டு' தான் வைத்திருக்கிறார்கள். குனிந்தோ நெளிந்தோ அனைவரும் (அதனைக் கடக்க வேண்டுமென்றால்) அதற்குள்ளால் தான் நுழைய வேண்டும்.


## வெளிநாட்டு மருத்துவர் சங்கம்

புதிதாகக் குடியேறிய மருத்துவர்கள் தமது நலன்களைக் கவனிக்கவென, குறிப்பாக நியூசிலாந்து மருத்துவக் கழகத்தின் கடுங்கோட்பாடு மற்றும் பிற இருட்டடிப்புகளினால் ஏற்படக்கூடிய அநீதிகளைத் தட்டிக் கேட்குமுகமாக 'நியூசிலாந்து வெளிநாட்டு மருத்துவர் சங்கம்' (NZ Overseas Doctors Association) என்ற அமைப்பை நிறுவியுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆரம்பத்தில் இதனை அலட்சியப்படுத்திய மருத்துவக் கழகம் இதன் வளர்ச்சியைக் கண்டு சற்று செவி சாய்த்தது. அடிக்கடி நிர்வாகக்குழு உறுப்பினர்களை அழைத்துப் பேசியது. எனினும் இறுதியில் மருத்துவக் கழகம் தன் நிலைப்பாட்டை மேலும் இறுக்கிக் கொண்டது. தான் நடாத்தி வந்த எழுத்துப் பரீட்சையை (NZREX written exam.) நிறுத்திக் கொண்டது. இதற்குப் பதிலாக அமெரிக்கப் பரீட்சையொன்றை (United States Licensing Exam. Step I, II - USMLE) ஏற்றுக் கொண்டது. இந்தப் பரீட்சையில் சித்தி எய்திய பின்னர் மருத்துவக் கழகம் நடாத்தும் NZREX Clinical Exam ஐ எதிர் கொள்ள வேண்டும். இதிலும் சித்தியடைந்த பின்னர் ஒரு வருடத்திற்கு இங்கு தொழில் புரியும் மருத்துவர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் (Probationary Registration) கடமை புரிதல் வேண்டும். அதனைத் திருப்திகரமாக முடிக்கும் பட்சத்தில் சுயமாகத் தொழில் செய்யக்கூடிய முழுமையான பொதுப் பதிவுச் சான்றிதழ் (General Registration) வழங்கப்படும்.

> “இலங்கைத் தமிழ் மருத்துவர்களா? உபத்திரவம் வேண்டாம் ஆளை விட்டால் போதும் !”

> வேலியில் ஒரே ஒரு ‘பொட்டு’ தான் வைத்திருக் கிறார்கள். குனிந்தோ நெளிந்தோ அனைவரும் அதற்குள்ளால் தான் நுழைய வேண்டும்

மொத்தமாக மூன்று வருடங்களை விழுங்கிவிடும் இந்த நிலை வரைக்குமான பரீட்சைக் கட்டணம் மட்டும் ஏறக்குறைய நியூசிலாந்து நாணயத்தில் நாலாயிரத்தை எட்டும். இது இலங்கை நாணயத்தில் ஒன்றரை லட்சங்களைத் தாண்டுகிறது.

## ஆங்கிலப் பரீட்சை

வெளிநாட்டு மருத்துவர்கள் முன்னர் குறிப்பிட்ட மருத்துவப் பரீட்சைகள் மட்டுமன்றி ஆங்கிலப் பரீட்சையொன்றிலும் சித்தி பெறுதல் அவசியமானதாகும். நியூசிலாந்து மருத்துவக் கழகம் தன் பரீட்சையுடன் NZREX English பரீட்சையினையும் நடாத்திவந்தது. ஆனால் இவை இரண்டும் இப்போது இல்லை.

தற்போது அமெரிக்காவின் USMLE பரீட்சையுடன் ஆங்கிலப் பரீட்சையும் நடைபெறும். அல்லது TOFEL ஆங்கிலத் தேர்ச்சிப் பரீட்சையில் குறிப்பிட்ட புள்ளிகள் பெறவேண்டும். (Overall grade of 570 including grades of 220 for the test of spoken English - TSE; and 4.5 for the test of written English -TWE)

அல்லது IELTS எனப்படும் பரீட்சையில் 7.5 புள்ளியோ அன்றி அவுஸ்திரேலியாவின் OET எனப்படும் தொழில்சார் ஆங்கிலப் பரீட்சையில் சித்தியோ எய்தல் வேண்டும்.

## வரப்பிரசாதம்

நியூசிலாந்திற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னமே குடியேறி நன்கு கால் பதித்துக் கொண்டவர்களும், மருத்துவ நிபுணர்களாக இருக்கின்றவர்களும் புதிதாக வந்திறங்கியுள்ள எம் மருத்துவர்களுக்கு பல உதவிகள் செய்து வருவது ஒரு வரப்பிரசாதம் ஆகும். “இலங்கைத் தமிழ் மருத்துவர்களா? உபத்திரவம் வேண்டாம்; ஆளை விட்டால் போதும்!” என்று ஒதுங்கி வாழும் சிலரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

நியூசிலாந்து வெளிநாட்டு மருத்துவர் சங்கம் தனது தலைமையகத்தில் ஒவ்வொரு சனிக்கிழமை மாலையும் வாய்மொழிமூல (கிளினிக்கல்) பரீட்சைக்குத் தயார்செய்யும் வகுப்புக்களை நடாத்தி வருவது பெரும் பணியாகும்.

## யுஎஸ் எம் எல் ஈ பரீட்சையிலும் மாற்றம்

அமெரிக்காவின் யுஎஸ் எம் எல் ஈ பரீட்சையிலும் சிறிதளவு மாற்றம் வரவிருக்கின்றது. இதுவரை எழுத்துப் பரீட்சைகளை (USMLE STEP I, II) நடாத்திச் சான்றிதழ்களை வழங்கியது. அடுத்த வருடம் 1988 ஜுலை முதலாம் திகதிக்குப் பின் பரீட்சை எடுப்பவர்கள் திறன்களை மதிப்பிடும் பரீட்சையொன்றையும் (Clinical Skills Assessment Test - CST) எடுத்தல் வேண்டும். இது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் பிரசுரமொன்றில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



This additional assessment will require the exminee to demonstrate proficiency on components of clinical skills such as history taking, physical examination, organisation and interpretation of clinical data, as well as interpersonal skills and Oral English - Source: ECFMG

இங்கு குடியேறுவதற்கு முன் உங்கள் துறைசார்ந்த தொழில் வாய்ப்புக்கள் எப்படி? சட்ட விதிமுறைகள் என்ன என்று தெரிந்து வைத்திருக்க வேண்டியது உங்கள் பொறுப்பு ஐயா! நீங்கள் எல்லோரும் படித்தவர்கள் அல்லவா?

அத்துடன் இந்த கிளினிக்கல் பரீட்சை அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தின் பிலடெல்பியா நகரில் ஒரேயொரு பரீட்சை நிலையத்தில் மாத்திரமே நடைபெறுமாம். வருடம் முழுவதும் நடைபெற இருக்கும் இப்பரீட்சை எடுப்பதற்கு அமெரிக்கா செல்ல வேண்டும்.

நியூசிலாந்துக் குடிவரவுத் திணைக்களம் வதிவிட விசாவுக்குப் புள்ளிகள் வழங்கும்போது இதுவரை மருத்துவப் பட்டங்கட்கு வழங்கியது போலன்றி இனிமேல் முன்னர் குறிப்பிட்ட பரீட்சைகளிற் சித்தியடைந்த பின்னரே மருத்துவப் பட்டப்படிப்பிற்குப் புள்ளிகள் வழங்கும்.

## *வாய்ப்புகளுக்குக் குறைவில்லை*

நியூசிலாந்து மருத்துவக் கழகத்தின் அங்கீகாரத்திற்குத் தேவையான பரீட்சைகளிற் சித்தியடைந்த பின்னர் மருத்துவர்களாகத் தொழில் பார்ப்பதற்குரிய வாய்ப்புகளுக்கும், வசதிகளுக்கும் குறைவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே புதிதாக வரவிருக்கும் மருத்துவர்களுக்கு இன்னமும் கதவு திறந்து இருக்கிறது என்றே கொள்ளல் வேண்டும்.

புதிதாகக் குடிபெயரவிருக்கும் மருத்துவர்களின் வசதிக்காக சில முக்கிய முகவரிகள் கீழே தரப்படுகின்றன.

1. The Examination Officer, Medical Council of NZ. PO Box 11-649, Wellington, NZ.
2. NZ Overseas Doctors Association PO Box 56-096, Auckland, NZ.
3. Educational Commission for Foreign Medical Graduates (FCFMG), 3264 Market Street, Philadelphia, Pennsylvania 19104-2685, USA.

## இரக்கம் செத்த கயிற்றின் முடிச்சு

மனக்கவலை
மாறாத நிலையில்
வீடும் காடும்
ஒன்றுதானே!

கவலையென்ன
கழுவி விட
கழன்றுபோகும்
கனத்த அழுக்கா!

அறையில்
விளக்கு சிரித்தபோதும்
மனம் மட்டும்
இருளில் அழுகின்றதேன்?

என்ன செய்ய?
ஏழை நான்
என்ன செய்ய?

மூன்று முடிச்சுக்கு
முக்காடு போட்டபணம்
மணமென்னும் வண்டியை
"பிரேக்" போட்டு நிறுத்தியதே!

நொண்டிய நினைவுகள்
நோட்டுத் தாள்களில்
கனவுகளாகி
கரைந்துபோனதே!

இனிப்பை நோக்கி
ஊரும் எறும்பாய்
பணத்தை நோக்கி
இடம் பெயர்ந்ததோ?

பணம் கொடுத்துக்
கூலித்தாலி
கட்டுவதென்றால்
காளை போடும்
முடிச்சென்ன?
இரக்கம் செத்த
கயிற்றின் முடிச்சா? - இல்லை
காலம் சொல்லும்
மூன்று முடிச்சா?

சௌந்தரி சிவானந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 3 நூற்றாண்டின் முன்னமே நியூசிலாந்தில் தமிழர்கள்?

## தமிழ் மணி தரும் தகவல்

வைத்திய கலாநிதி ம. இராசநாதன்.

வெலிங்டன் நூதன சாலையில் காணப்படும் "தமிழ் மணி" 1836ல் வில்லியம் கொலன்செ (William Colenso) என்பவரால் நியூசிலாந்தின் வடக்குப் பகுதியில் வங்கரே (Wangarei) என்ற நகருக்கு 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. 'மயோரி' இன மக்கள் வாழும் இக் கிராமத்திற்கு எந்த ஒரு ஐரோப்பியரும் அந்தக் காலங்களில் விஜயம் செய்திருக்கவில்லை என திரு. கொலன்செ கருத்துத் தெரிவித்துள்ளார். சமைக்கும் பாத்திரமாக தமிழ் மணியை உபயோகித்த 'மயோரி' மக்கள், அந்த மணி பல வருடங்களுக்கு முன் சூறாவளியால் தூக்கி எறியப்பட்ட ஒரு பெரிய மரத்தில் கண்டெடுக்கப்பட்டது எனக் கூறினார்கள். 'புரிரி' (Puriri) என அழைக்கப்படும் அந்த மரத்தில் இந்த 'மணி' பல்லாண்டு காலம் மறைந்து கிடந்ததாகக் கருதப்படுகிறது. சமைக்கும் பாத்திரமாகப் பயன்பட்டிருப்பதால் மணியின் விளிம்பு வெடித்துக் காணப்படுகிறது.

தமிழ் மணி நியூசிலாந்தை எவ்வாறு வந்தடைந்தது என்பது இன்னமும் ஒரு புதிராகவே உள்ளது. தமிழ் மணியில் பின்வரும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

Collection of the Museum of New Zealand Te Papa Tongarewa B.024208

த
மி
ழ்
ம
ணி



 - மணியில் உள்ளபடி

முகைய்யதீன் வக்குசு
உடையகபல் உடையமணி - திருத்தப்பட்ட தமிழில்

MuKai YYa TiiN VakkuCu
UTai Ya KapaL UTaiYa MaNi - எழுத்துப்பெயர்ப்பு ஆங்கிலத்தில்

கப்பலின் உரிமையாளர் யார் என்பதற்குப் பல விளக்கங்கள் இருக்கின்றன. மேலே தரப்பட்ட படம் தமிழ் மணியில் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களைக் காட்டுகிறது. எழுத்துப் பொறிப்புக்கு மேலும் கீழும் விளிம்புகள் இருப்பதால் அது இன்னமும் புதுமை மாறா நிலையில் இருக்கிறது. எழுத்துப் பொறிப்பு, மணியின் சுற்றளவில் பாதிக்கு மேல் செல்லவில்லை. எழுத்துக்கள் மணியின் மேற்பரப்பில் இருந்து வெளியே நீட்டிக்கொண்டிருக்கின்றன. மணியைச் செய்தபின் எழுத்துக்களைப் பொறித்திருக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது.

மொத்தமாக 22 எழுத்துக்கள் கொண்ட 6 சொற்கள் இருக்கின்றன. முதல் பத்து எழுத்துக்கள் கப்பலுடைய உரிமையாளரின் பெயரைக் குறிப்பன. நான்கு மெய்யெழுத்துக்களில் புள்ளிகள் இல்லாமை, அவை பழங்கால எழுத்து வழக்கு என்பதைக் காட்டுகின்றது.

பின்வரும் நிபுணர்கள் தமிழ் மணியில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களை மொழிபெயர்க்க உதவினார்கள்.

1. திரு. யேசுதாஸ் – ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி, நாகர்கோயில்.
2. திரு. பன்னீர்செல்வம் – ஸ்கண்டிநேவிய ஆசிய ஆராய்ச்சி நிறுவனம்.

1642ல் "ஏபல் டாஸ்மன்" (Abel Tasman) என்பவரே நியூசிலாந்தைக் கண்டுபிடித்த முதல் ஐரோப்பியர் என வரலாறு கூறுகிறது. ஆனால் தமிழ் மணியைப் போன்ற சான்றுகள், நியூசிலாந்து 1642க்கு முன்னரே கண்டு பிடிக்கப்பட்டது எனச் சில வரலாற்று ஆசிரியர்களைக் கூறச் செய்திருக்கிறது. தமிழர்கள் பழங்காலத்தில் கப்பலோட்டும் துறையில் சிறந்து விளங்கி உலகின் பல பாகங்களுக்கும் சென்ற போது நியூசிலாந்து என்று தற்போது அழைக்கப்படும் இந்த நாட்டிற்கும் வந்தார்கள் என்றோர் புனைகருத்து கூறுகிறது. தமிழர்கள் மாபெரும் கடலோடிகள் என்பது சரித்திரம் கூறும் உண்மை. கிறிஸ்து பிறப்பதற்குப் பல காலத்திற்கு முன்னரேயே தமிழர்கள், கிரேக்கர், உரோமருடன் வாணிபம் செய்தார்கள். மேலும் பல நூற்றாண்டு காலம் அரேபியருடனும், சீனருடனும், தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனும் வாணிபம் செய்தார்கள் என்பது பலர் அறிந்த உண்மை. தென்னிந்தியாவில் இருந்த தமிழ் அரசுகள் 15ம் நூற்றாண்டில் அழிந்தபோது தமிழர் வாணிபமும் முடிவடைந்தது.

மணியில் காணப்படும் எழுத்துப் பொறிப்பு, கப்பலின் உரிமையாளர் ஒரு முஸ்லிம் தமிழர் என்பதை எடுத்துக் காட்டுகிறது. அவர், தமிழ்நாட்டின் கிழக்குக் கரையில் உள்ள நாகபட்டினத்தின் பிரசித்தி பெற்ற வாணிபக் குடும்பங்களில் ஒன்றைச் சார்ந்தவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. தமிழ் மணியைத் தவிர தமிழர் நியூசிலாந்துக்கு வந்ததற்கான வேறு சான்றுகள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே தமிழ் மணி பற்றிய பிரச்சனை தனித்துவமான ஒன்றாகவும், இதுவரை தீர்க்க முடியாததாகவும் இருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சேர்த்து நோக்கப்பட வேண்டிய இன்னோர் சுவையான விடயம் பிஜி தீவுகளில் உண்டு. அங்கு கண்டுபிடிக்கப்பட்ட பழங்காலத்துக் கற்பாறைச் செதுக்கு வேலைகளில் உள்ள எழுத்துக்கள் பழைய காலத்து இந்திய எழுத்துக்கள் எனக் கருதப்படுகின்றன. ஆனால் அவைகள் இன்னமும் அடையாளம் கண்டுபிடிக்கப்படாது இருக்கின்றன. மேலும் அக்கற்பாறைச் செதுக்குகள் எப்படித் தோன்றின என்பதற்கும் விளக்கம் தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# WHAT'S THIS SPACE ???

This space is being set aside for the listing of Businesses and Services of Tamils in Australia, New Zealand, PNG, and Fiji.

**This is a FREE service.**

List your Business or Services with relevant information ie:

- **Type of Business or Profession.**
- **Name**
- **Address**
- **Phone and Fax Number**
- **Email address (if applicable)**
- **Brief description of the type of Business or Service**

When a considerable number has been listed, it will be published in the form of a Directory. At the time of publishing, an annual subscription fee will be applicable for inclusion in the list. This will cover the initial publication cost. All information will be updated annually. The subscribers will receive a free copy of the directory.

Make use of this valuable offer.
Understand and Cooperate with the fellow Tamils in the above Area.

**TOGETHER WE SERVE AND SURVIVE !**

**Write to : Listing of Business and Services**
**C/o Vennilavu, 158 Pigeon Mountain Road, Bucklands Beach, Auckland, NZ.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*With Best Compliments From*



# Swarangal

## ISAI MAALAI 1997

**(An evening of Light Indian Music)**

*Members of SWARANGAL
wish to thank the audience of
Auckland & Wellington,*

*who attended ISAI MAALAI 1997.*

*Your continued support and strength
has been a tremendous boost
to the success of both our shows.*

*A special thanks to our sponsors and
advertisers for their generosity.*



*We would also like to thank
all dancers, parents and
guest musicians.*



*We look forward to your support
in the years to come.*

Printed by Unie Arts (Pvt )Ltd.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்